
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"

Isaiah 62 : 10

Translated from **BS 852**

பொருளடக்கம்


இக்கட்டு காலத்தில் பாதுகாப்பு.................. 2

மேசியா தேவனுடைய தாசன்.................. 8

பாதாளம் வேதனை படுத்துவதற்குரிய
இடம் அல்ல..... 12

ஓர் கிறிஸ்தவ வீடு.................................... 17

தேவ புத்திரர் மனுஷ குமாரத்திகள்.............. 19

கன்வென்ஷன் அழைப்பு................................ 20



BS 852

TAMIL VERSION: 2

மே - ஜூன் 2009




# இக்கட்டு காலத்தில் பாதுகாப்பு

## SAFETY IN THE TIME OF TROUBLE

*"பூமியைத் தத்தளிக்கப் பண்ணக் கர்த்தர் எழும்பும்போது, அவருடைய பயங்கரத்திற்கும் அவருடைய மகிமை பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும் பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்வார்கள்."(ஏசா. 2 : 19, 21 NKJ).*

இந்த வசனமும் தானி. 12 : 1-ஐ போலவே இயேசுவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கலமட்டும் உண்டாயிராத ஓர் இக்கட்டுக் காலம் வரும் என்று நமக்குக் காட்டுகிறது. இயேசு இதே இக்கட்டுக் காலத்தைப் பற்றி மத்தேயு 24 : 21-ல் கூறுகிறார். "ஏனெனில் உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்."

இந்த கடைசி சில வார்த்தைகளுக்காக நாங்கள் உண்மையில் மகிழ்ச்சியடைகிறோம். ஏனென்றால் நாம் இப்பொழுது அனுபவிப்பதைப் போன்ற மற்றொரு உலகளாவிய இக்கட்டு காலம் திரும்பவும் நிகழ வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த வேத வசனம் குறிப்பிடுகின்றது. இந்த மகா உபத்திரவ காலமானது வேத வாக்கியங்களில் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டபடி "புறஜாதியாரின் காலம்" நிறைவடையும்போது துவங்கும் (லூக். 21 : 24). வேத வாக்கியங்களின் படியும் வேதாகம காலக் கணக்கின்படியும் கி.பி. 1914-ல் புறஜாதியாரின் காலம் துவங்கியது. (S. VOL.2 காலம் சமீபமாயிருக்கிறது 4-ஆம் அத்தியாயம் பார்க்கவும்) புறஜாதியாரின் காலம் முடிவடைந்ததிலிருந்து இக்கட்டுக்காலம் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக் காலம்" சரியாக 1914-ல் உலக மகா யுத்தத்தின் முதலாம் பகுதி தொடங்கிய அதே வேளையில் துவங்கியது. அப்பொழுதி லிருந்து உலக முழுவதும் அதாவது மனிதர்களின் தற்போதைய காரியங்களின் ஒழுங்குகள் தேவனுடைய எரிச்சலின் அக்கினியால் (சொல்லர்த்தமான அக்கினி அல்ல) அமிழ்ந்து கொண்டு வருகின்றன. தீர்க்கதரிசனத் தில் கூறப்பட்டுள்ளபடி அவருடைய சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி அவர் ஜாதிகளை சேர்த்து ராஜ்யங்களை கூட்டிவிட்டார். (அநேகர் தொடர்ந்து இங்கும் அங்கும் ஓடும் முறையிலும் [அதிகரிக்கப்பட்ட பிரயாணங்கள். தானி. 12 : 4] உடனடியான தகவல் தொடர்பு கொள்ளும் முறையிலும் இத்தகைய நவீன கண்டுபிடிப்புகளை மனுக்குலத்திற்கு அருளியதின் மூலம் அவர் கூட்டிச் சேர்த்துள்ளார்.) பூமியெல்லாம் அவருடைய எரிச்சலின் அக்கினியினால் அழியும். (செப். 1: 15-18; 3 : 8) "அப்பொழுது ஜனங்களெல்லா ரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒரு மனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப் பண்ணுவேன் என்று வசனம் 9-ல் குறிப்பிட்டுள்ள அற்புதமான வாக்குத்தத் தத்திற்காகவும் மற்ற அதைப்போன்ற அநேக தேவனு டைய வாக்குத்தத்தத் திற்காகவும் இவை சம்பவியாமல் வெறுமனே தேவனுடைய எரிச்சலின் அக்கினியினால் அழியு மானால் நாம் உண்மையில் நம்பிக்கை இழந்து விடுவோம். அழிவின் வேலை முடிவடைந்த பிறகு ஜனங்கள் சுத்தமான பாஷையைப் பெற்று அதன் மூலம் மனந்திரும்பி ஆண்டவராகிய தேவனை சேவிப்பார்கள் என்று குறிப்பிடுவதின் மூலம் அது சொல்லர்த்தமான அக்கினி அல்ல என்று இந்த வேத வசனம் நிரூபிக்கிறது.

## கவனிப்பவர்கள்

### WATCHERS

"உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை" ஜாக்கிரதையாக "கவனித்திருக்கக்கூடிய" (2 பேது. 1 : 19) கிறிஸ்தவ ஜனங்கள் கோபாக்கினையின் நாளினாலும் மகா உபத்திரவத்தாலும் நசுக்கப்படமாட்

COURTESY BY :
THE BIBLE STANDARD - (ISSN : 1556-8555) Publisher, the Laymen's Home Missionary Movement - Bible Standard Ministries 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. Editor, Ralph M. Herzig. Rates : One year's subscription-$12.00 (6 issues); single issues-$2.50 each. Web Site : www.biblestandard.com

பார்கள். அவைகளினூடே உலகமானது இப்பொழுது கடந்து சென்று கொண்டு இருக்கிறது. "வெளிச்சத்தின் பிள்ளைகள்" "காலங்களையும் சமயங்களையும்" குறித்து அறியாதவர்களல்லவே. அந்த நாள் திருடனைப் போல அவர்களை பிடித்துக் கொள்ளத்தக்கதாக அவர்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. (1 தெச. 5 : 1-5) மேலும் அவர்கள் மனுப்புத்திரருக்காக தேவன் நிறைவேற்ற இருக்கும் மகிமையின் விளைவை வேத வாக்கியங்களின் மூலம் அறிவார்கள். தீர்க்கதரிசனத்தில் மாபெரும் சிலையைக் குறித்துக் காட்டப்பட்டபடி பூமியின் ஆளுகையானது பொன்னிலிருந்து இரும்பிற்கும் களிமண்ணிற்கும் தரம் தாழ்ந்துவிட்டதை வேத வாக்கியங்கள் போதிக்கின்றன. (தானி. 2 : 32, 33 மேலும் விபரங்களுக்கு S. Vol-1 யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு 13-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்). "அந்த ராஜாக்களின் நாட்களிலே (களிமண்ணோடு இரும்பு கலந்திருப்பதில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது) பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி நிர்மூலமாக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும்." (தானி. 2 : 44; 7 : 13, 14, 27). தேவன் இவ்வாறு கூறுகிறார். "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் (ஆளுகை) பர்வதங்களின் கொடுமுடியில் (பூமியின் ராஜ்யங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக) ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுங்கு (குடியரசுகளுக்கு) மேலாய் உயர்த்தப் படும் எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து : நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்கு போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து [தலையும் சரீரமுமாகிய மகிமையடைந்த கிறிஸ்துவிட மிருந்து வெளி. 14 : 1] வேதமும். எருசலேமிலிருந்து [ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுயிலிருந்து] கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. (ஏசா. 2 : 2-4)

## இயேசுவின் இரண்டாம் வருகை

### JESUS SECOND COMING

"கவனித்திருக்கிறவர்களாகிய" விழித்திருக்கிற கிறிஸ்தவர்கள் யோவா. 14 : 19-ல் ஆண்டவர் கூறியுள்ளபடி உலகமானது மறுபடியும் அவரை தங்களது சடத்துவ சுபாவ கண்களால் காணாது என்பதையும் மானிட கண்கள் ஆவி ஜீவிகளை பார்க்கும் விதமாக சிருஷ்டிக்கப்படவில்லை என்பதையும் உயிர்த்தெழுதலில் இயேசுவின் தெய்வீக சரீரமானது "அதரிசனமான தேவனுடைய தற்சொருபமாக" (கொலோ. 1: 15) இருக்கிறது என்பதையும் அவர், சாவாமையுள்ளவரும் (1 கொரி. 15 : 27, 28 -ன்படி தேவன் இங்கே விடுப்பட்டுள்ளார்) சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாக இருக்கிறார். (1 தீமோ. 6 : 16) என்பதையும் தெளிவாக அறிந்து கொள்வார்கள். இந்த பிரகாசிக்கப்பட்ட தேவ ஜனங்கள், இயேசு தமது மாம்சத்தை "உலகத்தின் ஜீவனுக்காக" கொடுத்தார் என்பதையும் (யோவா. 6 : 51) இந்த பிரதிக்கிரையத்தை அவர் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் அவர் எடுக்க மாட்டார் என்பதையும் ஆனால் அவர் மாம்சத்தில் கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1 பேது. 3 : 18 ASV) என்பதையும் இப்பொழுது அவர் உயிர்ப்பிக்கிற ஆவி ஜீவியாக இருக்கிறார் (1 கொரி. 15 : 45) என்பதையும் "இப்பொழுது கர்த்தரே அந்த ஆவி ஜீவி" (2 கொரி. 3 : 17) என்பதையும் தெளிவாக அறிவார்கள். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதுமில்லை (1 கொரி. 15 : 50) ஆகையால் அவர் இப்பொழுது மாம்சத்தில் இல்லை என்பதையும் நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரி. 5 : 16) என்பதையும் நன்கு அறிவார்கள். அவர் மாம்சத்திலே கொலையுண்டு உயிர்ப்பிக்கிற ஆவி ஜீவியாக எழுப்பப்பட்ட பிற்பாடு மகிமையடைவதற்கு முன் தமது சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்த வேண்டிய நோக்கத்திற்காக மேற்கொண்டபோதும் "மாம்சமும் எலும்பும் ஒரு ஆவி ஜீவிக்கு இராதே" என்றார். அவர் ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்துவிட்டார் என்றும் (1 கொரி. 15 : 44) இப்பொழுது அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும் "அவருடைய தன்மையின் சொரூபமாக இருக்கிறார்." (எபி. 1 : 3) என்றும் அவர்கள் அறிவார்கள்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் முதலாம் நிலையின் விதம் உலகமானது கவலைப்படும்வரை மிகவும் அமைதியாகவும் ரகசியமாகவும் இருந்தது. அவருடைய உண்மையான சீஷர்கள் தவிர மற்றவர்கள் அறியவில்லை. அவர் பூமியை விட்டு பரமேறிய போதும் இதே விதமாகவே நடந்தது (அப். 1; 11) அவர் ஒரு திருடனைப் போல வரவேண்டும் (வெளி. 16 : 15) அவருடைய வந்திருத்தலை உலகம் அறியாது. நோவாவின் நாட்களிலும் லோத்தின்

நாட்களிலும் இருந்தது போலவே அவர் வந்திருக்கும் காலத்திலும் இருக்கும். பொதுவான ஜனங்கள் தங்களுடைய அன்றாட வேலைகளில் மூழ்கியிருப்பார்கள். அழிவு திடீரென அவர்கள் மேல் வரும் வரையில் அறிந்திருக்க மாட்டார்கள். (மத். 24 : 37-39; லூக். 17 : 26-30).

ஆண்டவருடைய உண்மையான விழித்திருப்பவர்கள் (லூக்.12 : 37). இந்த சத்தியங்களை மனதில் வைக்க வேண்டும். தேவனுடைய நாள் வரும் படிக்கு [கிரேக்க வார்த்தை பரௌஷியா, presence - இருத்தல்"] ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள் [இப்பொழுதுள்ள பொல்லாத உலகத்தின் தவறான மத ஒழுங்குகள் – நிச்சயமாக சொல்லர்த்தமான வானங்கள் அல்ல. அது பல லட்சம் மைல்கள் கொண்ட வெற்றிடத் தால் பிரிக்கப்பட்டதாகும். அது ஒன்றுமில்லாத வெற்றிடம். ஆகையால் அதனிடையே அக்கினியால் எரிவதற்கு ஒன்றுமில்லை] வெந்து அழிந்து, பூதங்கள் (மதம், அரசாங்கம், நீதி, தொழில்) எரிந்து உருகிப்போம். பூமியும் [இப்பொழுது சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மனித சமுதாயம்] அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." 2 பேது. 3 : 12, 10). ஆதாரங்களை ("அடையாளங்களை") கவனியுங்கள். அது உண்மையில் வந்துவிட்டது என்பதை இவைகள் குறிக்கின்றன. இப்பொழுது, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நாம் இந்த அடையாளங்கள் சமீபமாகிற தைக் காண்கிறோம். சுவிசேஷ யுக முடிவு சம்பந்தமாக வும், கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தல் சம்பந்தமாக வும் அநேக தீர்க்கதரிசனங்கள் நம்மிடையே நிறைவேறி வருகின்றன.

## கர்த்தருடைய நாள்

### THE DAY OF THE LORD

"சமாதானமும் சவுக்கியமும்" உண்டு என்ற அறிவிப்புகளின் மத்தியில் கர்த்தருடைய நாள் அதின் "சடுதியான அழிவுகளோடு" "இரவிலே திருடன் வருகிற விதமாக" உண்மையில் வந்து விட்டது. "கர்ப்பவதியான வளுக்கு வேதனை வருவது போல" அதனுடைய துன்பமான அனுபவங்கள் அதிதீவிரமாகவும் மிகவும் தொடர்ந்தும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பூமியில் உள்ள எந்தவொரு தேசமும் அதனிடமிருந்து தப்பிக்க முடியாது. (1 தெச. 5 : 2, 3). உபத்திரவம் எவ்விடத்திலும் காணப்படுகிறது. அது இன்னும் அதிகமதிகமாக பயமுறுத்துகிறது. "மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் மேகங்கள் மேல் (இந்த இக்கட்டு காலத்தில் துன்பங்களின் மத்தியில்) வருகிறதை அவர்கள் (உலகம்) காண்பார்கள் [அவர்களுடைய அறிவின் கண்களைக் கொண்டு காண்பார்கள்] (மாற். 13 : 26; மத். 24 : 30) என்று ஆண்டவர் நமக்கு கூறவில்லையா?

இந்த "கர்த்தருடைய நாள் உண்மையில் இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். விடியற்கால [ஆயிர வருட யுக] வெளுப்பு பர்வதங்கள் [ராஜ்யங்கள்] மேல் பரவும்." (சங். 30 : 5; யோவே. 2 : 2). அது "வெளிச்சமாயிராமல் இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ." "ஆரவாரம் பூமியின் கடையாந்திரம் மட்டும் போய் எட்டும். ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது...... இதோ ஜாதிக்கு ஜாதி தீமை பரம்பும். பூமியின் எல்லை களிலிருந்து மகா புசல் [தீவிரமான மற்றும் கடினமான உபத்திரவத்தையும் குழப்பத்தையும் குறிக்கும்] எழும்பும். அக்காலத்திலே பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனை மட்டும் [உலகளாவிய] கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்." (எரே. 25 : 31-33). "சகல ஜாதிகளின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும் அவைகளுடைய சகல சேனைகளின் மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது ........... அவர்களை கொலைக்கு ஒப்புக் கொடுக்கிறார்." (ஏசா. 34 : 2). "பர்வதங்களே [மனித சமுதாயம்] கர்த்தருடைய வழக்கைக் கேளுங்கள். கர்த்தருக்கு அவர் [பெயரளவிலான] ஜனத்தோடே வழக்கு இருக்கிறது. (மீகா 6 : 2). "அது கர்த்தர் பழி வாங்கும் நாள் சீயோனு டைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்" (ஏசா. 34 : 8). இதோ மேகங்களுடனே (இந்த கோபாக்கி னையின் நாளின் உபத்திரவங்களோடே) வருகிறார் [கர்த்தர்]. கண்கள் யாவும் அவரை [அவருடைய வந்திருக்குதலை, வல்லமையை, அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும்] காணும் [கிரேக்க வார்த்தை 2 யோவா. 11-ல் "தேவனைக் காணவில்லை என்ற இடத்தில் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. அது ஒன்றைப் பற்றிய உண்மையான அறிவை பகுத்து உணர்வது அல்லது அடைவது என்ற கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது] அவரைக் குத்தினவர் களும் அவரைக் காண்பார்கள். (சகரி. 12 : 10) : பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள்." வெளி. 1 : 7.

மேலே கூறப்பட்டவைகள் அனைத்தும் பரிசுத்த பவுலின் கூற்றிற்கு இசைவாக இருக்கிறது. (2 தெச. 1 : 6-9) கோபாக்கினையிலும் அழிவிலும் ["ஆக்கினையை செலுத்தும்படிக்கு ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு" வருதல். அக்கினி என்பது வேதாகமத்தில் அழிவிற்கு அடையாளமாக உபயோகப் படுத்தப்பட்டுள்ளது.] இயேசு தமது ஆவிக்குரிய அதிகார நிலையிலிருந்து ["வானத்திலிருந்து"] தம்முடைய வந்திருத்தலை உலகிற்கு வெளிப்படுத்து

வார். அவர் "ஜாதிகளின்மேல் உள்ள தமது அதிகாரத்தை" ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்றழைக்கப்படும் தமது மணவாட்டியாகிய தமது மகிமையடைந்த சபைக்கு கொடுப்பார். அவர்கள் இருப்புக் கோலால் ஜாதிகளை அரசாளுவது தற்போதைய மகா உபத்திரவ காலத்தில் தொடங்கி விட்டது. "அவர்கள் (ஜாதிகள்) மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படு வார்கள்." (வெளி. 2 : 26, 27; சங். 2 ; 8, 9). உண்மை யில் சங்கீதம் 50 : 3, 4-ல் உள்ள தீர்க்கதரிசனம் நம்முடைய இதே கண்களுக்கு முன்பாக நிறைவேறிக் கொண்டு வருகிறது. "நம்முடைய தேவன் வருவார் மௌனமாயிரார் [எப்போதும்] அவருக்கு முன்பாக அக்கினி பட்சிக்கும் [1914-ல் தொடங்கிய இந்த மகா உபத்திரவத்தின் அழிவைக் குறிக்கும்.] அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும் அவர் தம்முடைய [மாய்மால மான] ஜனத்தை கிறிஸ்தவ மண்டலத்தை நியாயந் தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் [உயர்ந்த அல்லது ஆளுகை செய்யும் அதிகாரங்களையும்] பூமியையும் [ஜனக் கூட்டங்களை யும்] கூப்பிடுவார்."

சில காலங்களுக்கு முன் நாம் ஆதாரப்படுத்திய படி "பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும் அலைகளும் [அமைதலற்ற நியமங்களில்லாத கூறுகள்] முழக்க மாயி ருக்கும் [தற்போதைய சமுதாய ஒழுங்குகளின் அரண் களுக்கு எதிராக] வானத்தின் சத்துவங்கள் [தற்போதுள்ள போலியான மத அமைப்புகள்] அசைக்கப்படும். ஆதலால் பூமியின் (சமுதாயம்) மேல் வரும் ஆபத்துக்களுக்கு பயந்து எதிர்பார்த்திருக்கிற தினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்து போம்." அதன் விளைவாக அநேகர் அதிகமதிகமாக, மனுஷருடைய காரியங்களில் ஓர் வல்லமை இயக்கிக் கொண்டிருப்பதை காண்பார்கள். அந்த காரியங்கள் தங்களால் ஈடு கொடுக்க முடியாதவை என்பதை அறிவார்கள். இவைகளிலிருந்து ஆண்டவர் தமது மகா வல்லமையோடும் மகிமையோடும் இந்த மகா உபத்திரவ மேகங்களில் வந்திருக்கிறார் என்பதைக் காண்பார்கள். (லூக். 21 : 25-27); வேளை வந்தது. அதில் அவர் "இன்னும் ஒரு தரம்" வானத்தையும் [ஆவிக்குரிய அதிகார வல்லமைகள்] பூமியையும் [முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட சட்டதிட்டங்களோடு நிலைத்திருக் கும் சமுதாயம்] சமுத்திரத்தையும் [அமைதலற்ற அராஜகம் நிறைந்த மனுக்குலத்தின் கூட்டங்களை] வெட்டாந்தரையையும் [பிரபுக்களின் ஆட்சியில் சமூக செழிப்பு மற்றும் சமூக சுதந்திரம்] அசையப் பண்ணுவேன்." இவ்வாறு கூட அவர் கூறியுள் ளார் : "சகல ஜாதிகளையும் அசைக்கப் பண்ணுவேன்.

[இந்த இக்கட்டு காலத்தில் ஒரு சில தேசங்களை மட்டுமல்ல இப்படிப்பட்ட இக்கட்டு காலம் உலக தோற்ற முதல் இதுவரை இல்லாததாகும். அது உலகளாவிய ஒன்றாகும் - ஆனால் இவைகளைத் தொடர்ந்து வரக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தங் களுக்காக நாம் நிச்சயமாக அவருக்கு நன்றி செலுத்து வோம். மகிமையான முடிவிற்கு வழி நடத்துவதற்கு இந்த உபத்திரவம் தேவையாயிருக்கிறது.] சகல ஜாதிகளின் விருப்பமானது வரும். [சமாதானமும் செழிப்புமான ஓர் ஆட்சி - பூமியிலே சமாதானமான ராஜ்ய ஆளுகையும் மனுஷர் மேல் பிரியமும் ஏற்படும் - லூக். 2 : 10, 14; அதற்காகவே நாம் "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று ஜெபிக்கிறோம் - மத். 6 : 10.] இந்த ஆலயத்தை மகிமையினால் நிறை யப் பண்ணுவேன்." (ஆகா. 2 : 6, 7; எபி. 12 : 16-19).

நமது தலைப்பு வசனம் இதுவரை மேலே விளக்கப்பட்ட இதே நிலைமைகளை வேறு வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்கிறது. அதைப் போலவே தானி. 12 : 1-ம் வசனமும் முக்கியத்துவப் படுத்து கிறது. அதாவது மிகாவேல் [இயேசுவின் மற்றொரு பெயர் - பிரதான தூதன் அதாவது தேவனுடைய விசேஷித்த தூதனானவர்] அக்காலத்தில் எழும்புவான். [அவருடைய இரண்டாம் வருகையில் அதிகாரத்தை மேற்கொள்வது] இதுவரை முன்சம்பவித்திராத ஓர் ஆபத்துக் காலம் வரும். ஆகையால் நமது வசனம் குறிப்பிடுவது என்னவென்றால் "அவன் எழும்பும் போது" மனித சமுதாயத்திற்கும் சகல ஜாதிகளுக்கும் கடுமையான அசைத்தல் ஏற்படும். கி.பி.1914 முதல் இவை நடந்தேறி வருகிறதை நாம் பார்த்தோம். "ஜுவாலித்து எரிகிற அக்கினி முதல் தீமைக்கும் தீமை செய்வோருக்கும் எதிராக கோபாக்கினை யோடு நீதியுள்ள ஆக்கினை செலுத்தும்படிக்கு ஜுவாலித்து எரிகிற அக்கினியில் [அழிவு] உலகிற்கு கர்த்தருடைய இரண்டாம் வருகை வெளிப்படுத்தப்படும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இவைகள் ஒவ்வொரு இடத்திலும் வலதிடது புறத்திலும் இது வெளிப்படுத்தப்படுகிறது. மனித சமுதாயத்தின் மிக உயர்ந்த நிலைகளிலும் மிக உயர்ந்த அதிகாரங்களிலும், வல்லமையுள்ள மனிதர்கள் இருக்கும் அரசாங்கம், நீதித்துறை, சமூக மத சம்பந்தமான உயர்ந்த இடத்தில் இருந்து கீழே உள்ள பொதுவான கூட்டம் வரையில் இது வெளிப்படுத்தப் படுகிறது. இதுவே கர்த்தருடைய வெளிப்படும் காலம். இதில் அவர் தம்முடைய மாபெரும் வேலையைத் துவங்குகிறார். இந்த மாபெரும் வேலை ஆயிர வருட

யுக நியாயத்தீர்ப்பு நாள் முழுவதும் நடக்கும். அது மூடியிருக்கக் கூடிய காரியங்களை வெளிப்படுத்தும். மறைவான விஷயங்களை எல்லாரும் அறியும்படி பண்ணும் இருளில் பேசப்பட்ட அநேக காரியங்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டதையும் அறையிலே காதிலே சொன்னது எதுவோ அது வீடுகளின் மேல் கூறப்பட்டதையும் நாம் ஏற்கனவே பல காரியங்களில் பார்க்கிறோம். மத். 10 : 26; லூக். 12 : 2, 3; 1 கொரி. 4 : 5.

மேலும் நமது தலைப்பு வசனம், "பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் போது" மனுஷர் "அவருடைய பயங்கரத்துக்கு" விலகி கன்மலைகளின் கெபிகளிலும் பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்வார்கள் என்பதை நமக்கு குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 6 : 15-17 (லூக். 23 : 30) ஆகிய வசனங்களில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் பர்வதங் களையும் கன்மலைகளையும் நோக்கி "நீங்கள் எங்கள் மேல் விழுந்து சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியான வருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்: அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது. யார் நிலை நிற்கக்கூடும்." என்பார்கள் தங்கள் மேல் விழும்படியாக சொல்லர்த்த மான கன்மலைகளிடம் ஜெபிக்கும் அளவிற்கு ஜனங்கள் மதியீனராய் இருப்பார்கள் என்பதை இது நிச்சயமாக குறிப்பிடவில்லை. மாறாக இங்கே இதன் சரியான கருத்து என்னவென்றால் அவர்கள் கர்த்தருடைய உபத்திரவ நாளில் ஏற்படும் அழிவில் இருந்து பாதுகாப்பையும், கேடகத்தையும், மறைவை யும், ஆதரவையும் தங்களுக்கு விரும்புவார்கள் என்பதாகும். "கன்மலையின் கெபிகள்" மற்றும் பூமியின் குகைகள் ஆகிய இந்த இரண்டு பதங்களும் பலதரப்பட்ட மானிட நிறுவனங்களையும் இன்சுரன்ஸ் கம்பெனிகள், வங்கிகள் ரகசிய ஸ்தாபனங் கள், ட்ரஸ்டுகள் வியாபார குழு ஆகிய இவை போன்ற மனிதர் நாடித்தேடும் பாதுகாப்பை அடையாளமாக குறிப்பிடுகின்றன.

## நாகரீகம் பூமிக்கடியில் செல்கிறது

### CIVILIZATION GOES UNDERGROUND

"பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்கு பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் அதிகமதிகமாக சோர்ந்து போம்." (லூக். 21 : 26). கன்மலையின் கெபிகளுக்குள்ளும் பூமியின் குகை களுக்குள்ளும் எவ்வாறு அவர்கள் சொல்லர்த்தமாகவே போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக அந்த தீர்க்கதரிசனத் தின் சொல்லர்த்த மான நிறைவேறுதலையும்கூட இது குறிப்பிடுகிறது. மனிதன் நவீன யுக நாகரீகத்தில் விண்வெளியை (space) கூட வெற்றி கொண்டதாக பெருமைப்படுகி றான். ஆனால் நவீன கால யுத்தமானது தன்னுடன் கொண்டு வந்துள்ள அழிவின் பயத்தினிமித்தம் அவன் பாதுகாப்பிற்காக பதுங்குக் குழியை நாடும்படியாக அதிகமதிகமாக வற்புறுத்தப்படுகிறான். கீழ்கண்ட சம்பவங்களை கவனியுங்கள். அமெரிக்கா ராவன் என்கிற கன்மலையின் மத்தியில் ஒரு பாதுகாப்பான மறைவிடத்தைக் கட்டியுள்ளது. இது வாஷிங்டன் D.C. யிலிருந்து அறுபத்தி ஐந்து மைல் தொலைவிலுள்ள ஓர் மலையாகும். பாதுகாப்பு இலாகாவைப் பொறுத்தவரை யில் இதனை கட்டி முடிப்பதற்கு மூன்று வருடங்கள் ஆயின. அதில் பூமிக்கடியிலுள்ள அலுவலகங்களின் ஆறு அறைகளும் பாதாள நீர் தேக்க தொட்டியும், இரகசிய ஆன்டெனாக்கள் (மின்காந்த அலைகளை கிரகிக்கவும், பரப்பவும் உபயோகப்படுத்தப்படும் அமைப்பு) உள்ள அறைகளும் வட்ட வடிவு ஆன்டென்னா மற்றும் மாபெரும் இரும்பு கதவுகள் ஆகிய இவைகள் இருக்கின் றன. 1951-ல் அந்த மலையில் அது உருவாக்கப் பட்டதிலிருந்து அது ஆதரவான தலைமை ஸ்தான ஸ்தாபனமாக நியமிக்கப்பட்டது. இந்த பாதுகாப்பான மறைவிடத்திற்கு வெள்ளை மாளிகையோடு நேரடி தகவல் தொடர்பு உள்ளது. மற்றொரு இரகசிய இடம் புளு ரிட்ஜ் (Blue Ridge) மலைகளின் மேல் அமைந்துள்ள மௌண்ட் வெதர் (Mount weather) என்பதாகும். இந்த வசதி தேச ரீதியாக அழிவு ஏற்படும் பொழுது மிக உயர்ந்த நிலையிலுள்ள சமூக மற்றும் இராணுவ அலுவல்களுக்கு ஒரு முக்கிய மாற்றிடமாக இருக்கும்.

## தேவனும் கிறிஸ்துவும் இல்லாமல் உண்மையான பாதுகாப்பு வேறொன்றும் இல்லை

### NO REAL SAFETY WITHOUT GOD AND CHRIST

மனுஷர் இந்த மகா உபத்திரவ நாளில் தங்களையும் தங்களுக்கு விருப்பமானவைகளையும் பாதுகாப்பதற்காக இதுவரையில் இல்லாத விதமாக நன்றாகவும் ஞானமாகவும் திட்டமிட்டு ஒழுங்குப்படுத்த லாம். ஆனால் அவர்கள் தேவனையும் கிறிஸ்துவை யும் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்களுடைய நினைவுகளில் தேவன் இல்லையென்றிருந்தால் (சங். 10 : 4), அவர்கள் நீதி மற்றும் சத்திய உபதேசங் களில் நிலைத்திராவிட்டால் அவர்களு டைய திட்டங்கள்

நிச்சயமாக பயனற்ற தாகிவிடும்.

இந்த மகா உபத்திரவ காலத்திற்கு மூன்று பாகங்கள் உள்ளன. அவை உலக யுத்தம், உலகப் புரட்சி உலகளாவிய அராஜகம் ஆகியன. இவை மூன்றும் எலியாவின் தரிசனத்தில் காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி (1 ராஜா. 19 : 11, 12) ஆகியவற்றின் மூலம் காட்டப்பட்டுள் ளன. இந்த மகா உபத்திரவ காலத்தின் அழிவுகளுக்கு பிற்பாடு அதாவது இந்த மூன்று காரியங்களும் தங்கள் வேலைகளை செய்து முடித்த பிற்பாடு (சங். 46 : 8). யேகோவா "பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங் களை ஓயப் பண்ணுவார்." (வசனம் 9). அதன்பின் அந்த காலகட்டத்தில் பூமியில் மீதமிருப்போரிடம் "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்று கூறுவார். (வசனம் 10). இந்த மகா உபத்திரவ காலத்தில் தாங்கள் பெற்ற அனுபவங்களின் மூலம் தாழ்மையை கற்றுக் கொள்வார்கள். அதன் பிறகு அவர்கள் "அமர்ந்த மெல்லிய சத்தத்தைக்" கவனித்துக் கேட்க தயாராக இருப்பார்கள். அவர்கள் இறுதியாக பூமியின் பிரச்சனை களை தீர்க்க சரியான ஒரே வழி நீதியும் பலமுமான அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்வார்கள். அந்த அரசாங்கமே எல்லா வகுப்பாரையும் அடங்கி சாதகமான சூழ்நிலையின் கீழ் மனித சித்தத்தின் கல்லான இருதயம் படிப்படியாக மாறும் வரையில் நீதியின் கொள்கைகள் வலியுறுத்தப் பட்டு உண்மையான தேவ சாயலில் மாற்றப்படும் என்பதை புரிந்து கொள்வார்கள். இவையெல்லாம் கிறிஸ்துவின் ஆயிர வருட யுக ராஜ்யத்தினாலும் அதன் மூலமும் மனுக்குலம் நிறைவடைவதற்காக தேவன் எவைகளை வாக்குத்தத்தஞ் செய்திருந்தாரோ அவைகளே ஆகும். கிறிஸ்துவின் ஆயிர வருட யுக ராஜ்யத்தை இந்த உபத்திரவ நாளின் பாடங்களின் மூலம் யேகோவா அறிமுகம் செய்கிறார். (எசே. 11 : 19; 36 : 25, 36; எரே. 31 : 29-34; செப். 3 : 9).

ஆயினும் மனிதனுடைய விழுந்து போன சுயநலமான நிலையின் விளைவாக இயற்கையாகவே தவிர்க்க முடியாதபடி இந்த இக்கட்டு காலம் வந்திருக்கிறது. ஆனால் இவைகளெல்லாம் முன் கூட்டியே தேவனால் பார்க்கப்பட்டு அவரால் நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனுபவங்களும் கட்டாயப் படுத்துதலும் கீழ்ப்படிதலை உண்டாக்கும் வரையிலும் தம்முடைய பிரமாணங்களும், அறிவுரைகளும் எல்லாராலும் அசட்டை செய்யப்படும் என்றும் அவர் முன்னறிந்திருந்தார்.



யாரெல்லாம் வந்து கொண்டிருக்கிற காரியங் களை உணர்கிறார்களோ அவர்கள் தங்களையும் தங்கள் அலுவல்களையும் அது சம்பந்தமாக ஒழுங்குகளில் சரிப்படுத்திக் கொள்வார்கள். நாங் கள் உலகத்திலும் பெயரளவிலான கிறிஸ்தவர்களில் உள்ள போதிக்கப் படுவதற்கும் வழிநடத்தப்படுதற்கும் ஏற்ற தாழ்மையுள்ளவர்களிடம் "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமை யானவர்களே, கர்த்தரு டைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே அவரைத் தேடுங்கள். நீதியைத் தேடுங்கள்; மனத்தாழ்மை யைத் தேடுங்கள் அப்பொழுது ஒரு வேளை கர்த்தருடைய கோபத் தின் நாளிலே மறைக்கப் படுவீர் கள். (செப். 2 : 3). பொது வான மனுக்குலம் மகா உபத்திர வத்தி லிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. ஆனால் நீதியை தேடி மனத்தாழ்மையினால் மன மகிழ்ச்சியாயிருப்பவர்களுக்கு மற்றவர்களைவிட அநேக அனுகூலங் கள் இருக்கும். அவர்களுடைய ஜீவியத் தின் விதமும் அவர்களுடைய சிந்தனைகளின் பழக்கங் களும் அவர்களுடைய நடத்தையும் நீதியினிமித்தம் அவர்கள் காட்டும் அநுதாபங்களும் அவர்கள் காரியாதிகளின் நிலைமையை உணர்ந்து அறிந்து கொள்ளவும் இத்துன்பத்தையும் அதினால் உண்டாகும் பலன்களையு ம் பற்றி வேதாகமம் சொல்வதை நன்கு மதிக்கவும் அவர்களைத் திராணி யுள்ளவர்களாக்கும். மேலும் அவைகளெல்லாம் அவர்களுக்கு அநுகூல மாக இருந்து மற்றவர்களை விட இவர்கள் குறைவான துன்பங்களை அனுபவிக்கச் செய்கின்றன - விசேஷமாக அவர்கள் தங்களை நெருக்குகிற பயங்களின் மூலமாகவும், வருமென்று எதிர்பார்க்கிற பயங்களின் மூலமாகவும் தங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை குறைவாய் அனுபவிப்பார் கள்.

***

# மேசியா - தேவனுடைய தாசன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## THE MESSIAH - GOD'S SERVANT

"கர்த்தருடைய நாள்..... சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் ...... அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம் ...... பூதங்கள் வெந்து உருகிப்போம்." 2 பேது. 3 : 10-12.

பரிசுத்த பேதுருவின் வாக்கியம் இவ்வுலகின் முடிவு எவ்வாறு இருக்கப் போகிறது என்று கூறுகிறது. இந்த கூற்று, சிறிது காலத்திற்குள் அல்லது ஏதோ ஒரு காலத்தில் நம்முடைய பூமி எரிந்து இல்லாமல் போகும் என்ற கட்டளையை தேவன் பிறப்பித்திருப்பதாக எண்ணி இந்த கருத்தை பொதுவான கிறிஸதவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக அவர்களை திசைத்திருப்பியது. மேசியா இரண்டாம் முறை வந்து தமது நீதியின் ராஜ்யத்தை நிறுவி, பாவத்தை எடுத்து எறிந்து போட்டு, மனுக்குலத்தை கட்டுகளிலிருந்து விடுவித்து, அவர்களின் பலவீனங்களை இல்லாமல் செய்து, மரண பிடிப்பிலிருந்து விடுவித்து, இந்த பூமி முழுவதையும் ஆசீர்வதித்து, பரதீஸில் ஜீவிப்பதற்கு மனிதன் பரிபூரண மனிதனாக மாற்றப்பட்டு சிறிய அளவில் ஏதேன் தோட்டத்தில் இருந்த மகிமையான நிலைமைக்கு எல்லாவற்றையும் திரும்பவும் கொண்டுவந்து எப்படிப்பட்ட இரம்மியமான நிலையில் இருந்ததோ அப்பிரகாரமே இந்த பூமியை மீண்டும் நன்னிலைக்கு கொண்டுவரு வார், என்று இவை களுக்காக ஆரம்ப காலத்தில் ஆதித் திருச்சபை எதிர்பார்த்தும் விண்ணப்பித்தும் வந்தனர். (அப். 3 : 19-21)

## நூற்றாண்டுகள் கடந்து போயின

### CENTURIES PASSED

நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் மேசியாவின் ராஜ்யம் யாவரும் அறியக்கூடிய விதத்தில் இன்னமும் வரவில்லை. இதனால் மேசியாவின் ராஜ்யத்தை எதிர்பார்த்து இருந்தவர்கள் வேறுவித யோசனைகளுக்கு இடம் அளித்தனர். அவர்கள் கருத நினைத்தது என்னவென்றால் அப்போஸ்தலர் பேதுரு இந்த பூமியின் முடிவு எவ்வாறு இருக்கப் போகிறது என்று விளங்கிக் கொண்ட விதத்தில் இயேசு குறிப்பிடவில்லை. ஆனால் இயேசு கருதியது என்னவென்றால் அவருடைய கண்காணிப்பின் கீழ் திருச்சபை இந்த உலக மக்கள் யாவரையும் மன மாற்றம் செய்யும் என்றும்; அதன்பிற்பாடு மனமாற்றம் பெற்ற மனுக்குலத்தை ஓர் ஆயிர ஆண்டு காலம் ஆட்சி செய்த பிற்பாடு மேசியா வருவார். வந்து அவர்களின் கிரியைகளுக்கு ஒப்புதல் அளித்து அதன்பிற்பாடு பரிசுத்தவான்களைக் கூட்டிக் கொண்டு பரத்திற்கு சென்ற பிறகு இந்த பூமி முழுவதையும் அக்கினிக்கு இரையாக்குவார் என்றெல்லாம் சிந்திக்க தொடங்கினர். இந்த தவறான கருத்துக்களோடு இசைந்து கத்தோலிக்க மதத்தினரும் புராட்டஸ்டாண்டு மதத்தினரும் செயல்பட்டு வந்தனர். இதில் கத்தோலிக்கர்கள் வெகு காலத்திற்கு முன்பே மேசியாவின் ராஜ்யம் நிறுவப்படாயிற்று என்றும் போப்பாண்டவரும் கார்டினல் பதவி வகிப்போரும் இயேசுவிற்கும் திருச்சபைக்கும் பிரதிநிதிகளாக ஆட்சியில் இருந்து வருகிறார்கள் என்றும் உரிமைக் கோருகின்றனர். மேலும் கத்தோலிக்க போப்புதான் கிறிஸ்துவின் ராஜ்ய பிரதிநிதி என உரிமை கொள்வார்கள். அதாவது கிறிஸ்துவிற்குப் பதிலாக அவரது பிரதிநிதியாக போப்பாண்டவர் தான் இந்த பூமியை ஆண்டுவருகிறார் என்பார்கள். அதுமட்டுமல்ல கிறிஸ்துவின் "ஆயிர வருட யுகம் ஏற்கனவே முடிந்து விட்டது. அதாவது அது 1799-ல் முடிவடைந்து விட்டது என்றும் அது முதல் கொண்டு வெளிப்படுத்துதல் 20 : 3-ல் சொல்லியிருக்கிற "கொஞ்ச காலத்தில்" நாமெல்லாம் இப்பொழுது இருக்கிறோம் எனக் கூறிவருகிறார்கள். அவ்வசனத்தின்படி இந்த ஆயிர வருட இறுதி காலத்திலிருந்து சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டு இருக்கிறான் என்றும் போதித்து வருகின்றனர். இதில் பெரும்பாலோர் விளங்கிக் கொண்டிருப்பது என்னவென்றால் பொதுவாக புராட்டஸ்டாண்டு மதத்தினரும், குறிப்பட்டு சொல்வதென்றால் Socialism சோஷியலிசமும், Free Masonry பிரி மேசன்றி போன்ற இயக்கங்கள் எல்லாம் சாத்தானுடையது என்பதாகும். அத்துடன் இவைகள் அனைத்தும் அதிவிரைவில் இவ்வுலகம் எரிந்து போகையில் அதுவும் இல்லாமல் ஆக்கப்படும் என்று நினைக்கின்றனர். இந்த விஷயத்தில் புராட்டஸ்டண்டு மதத்தினரும் அதிகம் குழம்பிப் போயிருக்கிறார்கள். நாம் யாவரும் இப்போது மேசியாவின் ஆட்சியில் இருந்து வருகிறோம் என்று கோருகிறார்கள். ஆனால் மேசியாவின் ஆட்சி எப்போது ஆரம்பித்தது என்றும் அல்லது அது எப்போது முடியும் என்கிற விவரங்களை உறுதிபட கூற இயலாது இருக்கின்றனர். லூத்தருடைய Luther நாட்களுக்கு முந்திய காலங்களில் கத்தோலிக்கருடைய இந்த கருத்து தடையின்றி நிலவி வந்தது. ஆனால் லூத்தருடைய போதனைகள் போப்பு மார்க்கத்தின் போதனைகள் உண்மைக்குப் புறம்பானது என போதித்தன. அதன்படி போப்பு மார்க்கம் ஓர் அந்தி கிறிஸ்துவின் மார்க்கம் என முத்திரையிடப்பட்டது. அது முதற்கொண்டு புராட்டஸ்டண்டு மதத்தினர் உறுதியாக எதுவும் கூற இயலாத தடுமாற்றத்தில் இருந்து வருகின்றனர். வேறு பலர் இங்கிலாந்தில் இருந்து வரும் Church of England இங்கிலாந்து திருச்சபையையும் அந்த நாட்டு அரசவையும்தான் பூமியில் தேவனுடைய ராஜ்யமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதே சமயத்தில் அது உலக மனைத்தையும் தன்னுடைய குடையின்கீழ் இன்னமும் கொண்டுவரவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல தேவனுடைய சித்தம் பரலோகத்தில்

செய்யப்படுவது போல் ஏன் இன்னமும் பிரிட்டனுக்குச் சொந்தமான தீவுகளில் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதேபோல் ரஷ்ய தேசத்தில் உள்ள Church of Russia ரஷ்யாவைச் சேர்ந்த ரஷ்ய கிறிஸ்தவ சபையும் தாங்களும் தேவனுடைய பரலோகத்திற்குரிய ராஜ்யத்தைச் சார்ந்த பூலோக பிரதிநிதிகள் என உரிமை கோரி வந்தனர். அத்துடன் ரஷ்ய மன்னன் Czar சாரை மேசியாவின் பிரதிநிதியாக கருதி முதல் மரியாதை செலுத்தி வந்தனர். ஜெர்மானிய சக்கரவர்த்தி வில்லியமும் தமது நாணயங்களில் தானும் "தேவனுடைய தயவினால்" ஆட்சி செய்வதாக காட்டுவதற்கு ஏற்ப முத்திரை ஒன்றை பதித்திருந்தார். அவருடைய ராஜ்யம் மேசியாவின் ராஜ்யத்தின் ஓர் பகுதியாக கருதினார்கள். இன்றைய நாட்களில் இந்த கத்தோலிக்க, புராட்டஸ்டாண்டு வகுப்பாரின் இது போன்ற கருத்துக்கள் படிப்படியாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

## அறிவூட்டும் காலங்கள்

### DAYS OF ENLIGHTENMENT




நமது நாளின் வெளிச்சத்தில் எவரும் இது போன்ற கருத்துக்களை பிரசங்கிக்க துணிய மாட்டார்கள். இன்றைய நாட்களின் வெளிச்சத்தில் ஐரோப்பாவில் இருக்கும் பலவித ராஜ்யங்கள் மேசியாவின் ராஜ்யங்கள் என்றும் அது மேசியாவின் நேர்மையான ஆட்சியை ஸ்திரப்படுத்தி வருகிறது என்று கூறுவது மூடத்தனமாக காணப்படுகிறது. இவ்வாறு மேசியாவின் நீதி மற்றும் சமாதானமான ராஜ்யத்தின் பகுதிகளாக இருக்கிறோம் என்று கூறும் பல்வேறு நாடுகள் பெரும் அளவில் யுத்தத்திற்கு ஆயத்தங்களை செய்வதின் மூலம் முற்றிலுமாக தங்களையே இழிவு படுத்துகின்றனர். இன்றைய நாட்களில் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டுள்ள எல்லா பேர் கிறிஸ்தவ சபைகளும் அதிவிரைவில் இவ்வுலக மக்கள் யாவரும் மனமாற்றம் அடைந்து விடுவர் எனவும் அதுமட்டுமல்ல அடுத்த ஓர் ஆயிரம் ஆண்டு காலத்திற்கு இவர்களின் சபை அரசாட்சி செய்யும் என்றும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அதிவிரைவில் வந்துவிடும் என்றும் அதன் பின்னர் முடிவாக இந்த உலகம் அக்கினிக்கு இரையாகும் எனவும் கூறிவருகிறார்கள். எத்தனை விநோதமாக இருக்கிறது! எத்தனை முரண்பாடாக இருக்கிறது! நம்பகமான அரசாங்க கணக்கெடுப்பின் பிரகாரம் புறஜாதியாரின் எண்ணிக்கை முந்தைய நாட்களைவிட இக்காலத்தில் எண்ணிக்கையில் இரண்டு மடங்கு அதிகரித்திருக்கின்றது. சுமார் ஒரு நூற்றாண்டு காலங்களுக்கு முன்பு 856000 இருந்தது. இப்போதோ 1.2 பில்லியன் மக்கள் இருக்கிறார்கள். இந்த அளவின்படி புறஜாதியாரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போனால் எத்தனை ஆண்டு காலங்கள் உலகத்தை மனமாற்றம் செய்ய வேண்டியிருக்கும்? புறஜாதியார் மனமாற்றம் செய்யப்பட்டு இன்றைய நாகரீகத்தின் உச்சியில் இருக்கும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கு ஒப்பாக இவர்களும் உயர்த்தப்பட்டால் தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுகிறது என கருத இயலுமோ? நிச்சயமாக அப்படியல்ல. இந்த பூமியின் குடிகள் யாவரும் மனமாறுதல் செய்யப்பட்டு தேவனுடைய சித்தமும் செயல்பட்டு அவரின் இரட்சிப்பின் திட்டமும் முடிவடையும் வரையில் மேசியாவின் இரண்டாம் வருகை தள்ளிப் போகாததினால் நாம் தேவனுக்கு நன்றி கூறுவோமாக. அதற்கு நேர் மாறாக அவரது வருகையின் முழு நோக்கமும் யாவற்றையும் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய வைப்பதே ஆகும். இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் தமது திருச்சபையை பொது நோக்குடன் ஒன்று சேர்த்து அரசாட்சி செய்வதற்கே அவர் வருகிறார். அவர் ராஜ அதிகாரி மூலம் அரசாட்சி செய்யாமல் அவரே நேரடியாக ஆளுகைச் செய்வார். தேவனுக்கு மகிமையாக முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்.

## நியாயத்தீர்ப்பு நாள்

### THE JUDGMENT DAY

விசுவாசம் கொண்ட திருச்சபை நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலாகிய மகிமைக்கும், கனத்திற் கும் அழியாமைக்குமுரிய முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். அவரோடுகூட ராஜாக்களும் ஆசாரியர்களுமாக ஆகி ஆயிர வருடம் அரசாளுவார் கள் வெளி. 20 : 6. இந்த பூமி அக்கினியினால் விரைவிலோ அல்லது என்றென்றைக்கும் அழிக்கப்படும் என்ற கருத்து "பூமியோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது" என்ற வேத வாக்கியத்திற்கு முரண்பாடாக இருக்கிறது. அவர் பூமியை வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காக செய்துபடைத்து அதை உருவேற்படுத்தி னார். (பிர. 1 : 4; ஏசா. 45 : 18). இந்த பூமி அக்கினியி னால் அழியும் என்று ஆணித்தரமாக உரைக்கும் ஓர் வேதப்பகுதியாக செப். 3 : 8 காணப்படுகிறது. "நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் : என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும் ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன், பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." - கோபம். பூமியின் மீது வரவிருக்கும் தேவனுடைய கோபமாகிய அக்கினி இந்த சடத்துவ பூமியையும் அதின் குடிகளோடுகூட அழிக்கப் போவது இல்லை. ஆனால் இந்த பூமியில் இயங்கி வரும் இப்பொழுதுள்ள பொல்லாத ஸ்தாபனங்கள் அழிந்து போகும். இதன் பிறகு என்ன சம்பவிக்கும் என்பதை அடுத்து வரும் வாக்கியம் கூறும். "அப்பொழுது

ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒரு மனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்வார்கள்." இந்த செப்பனியா 3 : 8-ல் சொல்லப்பட்டிருக்கிற அக்கினி என்கிற வார்த்தையை சொல்லர்த்தத்தில் எடுத்துக் கொண்டால் இந்த பூமியும், இந்த பூமியின் குடிகளும் அக்கினியினால் அழிக்கப்படுவார்கள். ஆனால் அக்கினி என்ற வார்த்தையை அதன் ஞான அர்த்தத்தில் எடுக்க வேண்டும். அதன்படி அநீதி, அநியாயம், பாவம் எல்லா பொல்லாத ஸ்தாபனங்களும், இது போன்று நாம் காண்கிறயாவும் தேவனுடைய எரிச்சலின் அக்கினியினால் அழியும் என்பதைக் காணலாம். மனுக்குலமானது எழுப்பப்பட்டு அவர்கள் தேவனுடைய சித்தத்தை அதாவது தெய்வீக செய்தியாகிய சத்தியமாகிய பாஷையை கேட்பதற்கு ஆயததப்படுத்தப் படுவார்கள்.

## கர்த்தருடைய நாள்

### THE DAY OF THE LORD

நாம் இதுவரை பார்த்தவை அதைவிட அதிக கடினமானதான பரிசுத்த பேதுரு கூறியுள்ள வேதப் பகுதிக்கு நம்மை ஆயத்தம் செய்கிறது. "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம் ......... தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங் கள். அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்." (2 பேது. 3 : 10-13). இந்த வேதாகமப் பகுதியில் வரும் பரிசுத்த பேதுருவின் வார்த்தைகளை வேறு வேதாகமப் பகுதிகளோடு நாம் இசைவுப்படுத்த வேண்டுமென்றால் இங்கு 'அக்கினி' என்று சொல்லப்பட்டிருக்கும் வார்த்தையை சொல்லர்த்தத்தில் எடுத்துக் கொள்ளாமல் அதன் ஞான அர்த்தத்தில் அர்த்தப்படுத்த வேண்டும். இந்த கூற்றின்படி பூமி மாத்திரம் அக்கினிக்கு இரையாக்கப்படாமல் வானங்களும் அழிக்கப்படுகின்றன. முதலில் வானங்கள் அக்கினிக்கு இரையாக்கப்பட்டு அவைகள் வெந்து அழிந்துவிடும். இங்கு வானங்கள் என்று குறிப்பிடப்பட்டி ருப்பது எதனைச் சுட்டிக் காட்டுகிறது? அது நட்சத்திர மண்டலமும் அல்ல, நமது வானமாகிய வாயு மண்டல பகுதியும் அல்ல. தேவன் பிரசன்னமும் மகிமை பொருந்தியதுமான வானங்களும் அல்ல. ஒளியை கொண்டு செல்பவர்களாக போதகர்களே அடையாள மான வானத்திலுள்ள நட்சத்திரங்களால் குறிப்பிடப்பட் டுள்ளனர். (தானி. 12 : 3; மல்கி. 4 : 2; மத். 13 : 43; யூதா 13; வெளி. 1: 20; 9 : 1; 12 : 1; 22 : 16) இந்தப் பிரகாரம்தான் சபை ஒழுங்குகளும் அதிகாரங்களும் வானங்களுக்கு அடையாளப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அவை தற்காலத்தில் வெளிச்சம் வீசுதலாகிய தங்கள் போதனைகளால் "பூமி" என்ற பதத்தால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள தற்காலிக சமுதாய அமைப்புகளை மேற்பார்வையும் ஆளுகையும் செய்கின்றன. (பிர. 1: 4; ஏசா. 60 : 2; ஆதி. 4 : 14; 6 : 11-13; 9 : 11; மத். 5 : 13) இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட சமுதாயத்திற்கு எதிர் மாறாக வருவது "சமுத்திரம்". சமுத்திரம் அல்லது கடல் ஒழுங்கற்ற சமுதாயத்தை அடையாளப்படுத்துகிறது. அதாவது நாகரீகமற்ற சமுதாயத்தையும், சமுதாயத்தில் உள்ள அரசாங்க ஆளுகைகளுக்கு விரோதமாக கலவரம் செய்வோரையும் சமுத்திரம் அடையாளப்படுத்து கிறது (சங். 46 : 2, 3; லூக். 21 : 25; வெளி. 20 : 13; 21 : 1). தற்கால "வானங்கள்" (குப்பறையான மத சம்பந்தமான சக்திகள்) "வெந்து அழிந்து போம்". அது மட மட என்று சத்தத்தோடு அதாவது மாபெரும் குழப்பம் மற்றும் கிளர்ச்சிகளோடு அழிந்து போகும். இன்றைய நாட்களில் மதஸ்தாபனங்கள் எல்லாம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கி தவிக்கின்றன. இவர்களின் மதஸ்தாபனங்கள் எல்லாம் திடீரென அழிந்து போகுமோ என்கிற அச்சத்தில் இருக்கிறார்கள். சபை ஆராதனைக் கூட்டங்களுக்கு ஒரு சிறிது எண்ணிக்கை கொண்டவர்கள் மாத்திரமே வருகை தருகிறார்கள் என்றும் அத்துடன் அதன் விளைவாக அவர்களுக்கு வரும் காணிக்கையின் அளவும் சிறிதாக இருக்கிறது என்றும் பிரதான குரல் ஒலிக்கிறது. சபை ஒழுங்குகளுக்குள்ளே ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்கெட்டுப் போகும் என்பதை பரிசுத்த பேதுருவின் வார்த்தைகள் குறிக்கிறது. வேதப்பகுதிகள் மற்றொன்றையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அதன்படி எல்லா மதங்களும் ஒன்றுகூடி தங்களுக்குள்ள ஒருவித கூட்டமைப்பை உருவாக்கும். அவ்விதம் செய்து கடந்த ஆண்டுகளில் இதுவரை இல்லாததோர் வலிமை மிக்கதோர் மதஸ்தாபனத்தை உருவாக்கும். வேறு பல வேதாகம ஆதாரங்களின் படி நாம் அறிய வருவது என்னவென்றால் இந்த மத ரீதியான கூட்டமைப்புகள் யாவும் உலகம் முழுவதையும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்து வருகிறார்கள். இதில் அரசியலையும் அரசாங்க அதிகாரங்களையும் தங்களுக்கு உடந்தையாக மாற்றிக் கொண்டு இவ்வுலகை ஆட்சி செய்ய முற்பட்டுவருகிறார்கள். இவர்களின் முயற்சி ஓர் அளவிற்கு இவர்களுக்கு வெற்றியையும் கொண்டு வந்திருக்கிறது. அதன் வாயிலாக பொது மக்களை தங்கள் வசம் மதிமயக்கியும் வருகிறார்கள். இது காலப்போக்கில், முற்றிலுமாக பொது மக்கள் தாங்கள் இருந்து வரும் சுயாதீனத்தையும் அவர்கள் இழக்க வேண்டிவரும். இதன் விளைவாக மக்கள் மத்தியில் ஓர் பெரும் புரட்சி தோன்றும். இதனை ஓர் "பூமி அதிர்ச்சியின்" மூலமாக வேதாகமம் அடையாளம் காட்டியிருக்கிறது. அச்சந்தர்ப்பத்தின் போது தான் "வானங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த அதிகாரங்களை வகித்திருப்போர் தேவனுடைய எரிச்சல் என்கிற 'அக்கினிக்கு இரையாவார்கள். அப்போது மட மடவென இரைச்சல் உண்டாகி அதாவது குழப்பங்களும் அழிவுகளும் முதலானவைகள் இருக்கும். இத்தகைய கிளர்ச்சி சமுதாய ஒழுங்கு முறைகளிலும் உண்டாகியிருக்கும். பூதங்கள் கடுமையான வெப்பத்தினாலும் எதிர்ப்பு

களினாலும், யுத்தத்தினாலும் உருகிப்போகும். அதன் பின் அது ஏற்படுத்தப்படும். கிளர்ச்சிகளும் போராட்டங்களும் உண்டாகும். நல்லவர்களின் உதவிகளும் பரஸ்பர சாதகமான முறைகளும் சமுதாயத்தின் கூறுகள் ஆகும். அதன் மீது நிலையான அரசாங்கம் நிலைத்து நிற்கும். சமுதாயம் வெந்து உருகுதல் மூலம் அதின் காரியாதிகளின் நிலைமையையும் அந்த வேளையில் மூட நம்பிக்கை மற்றும் சுயநலம் ஆகியவற்றின் விளைவினால் ஏற்படும் யுத்தத்தின் மகா வெப்பத்தில் அதன் கூறுகள் தூள்தூளாகும் என்பதை அடையாளங்களின் மூலம் வேதாகமம் தெளிவாக குறிப்பிடுகிறது. இதன் முடிவில் அராஜகம் தோன்றியிருக்கும். அல்லது வேதாகமம் கூறுவதுபோல் "ஒவ்வொருவனுடைய கரங்களும் அவன் அயலானுக்கு விரோதமாக எழும்பும்." இதில் முக்கிய பங்கு ஏற்று செயல்படுவது ஒவ்வொருவரின் சுயநலமே. அவர்களின் குறிக்கோள்களும் சுயநலத்தின் அடிப்படையில்தான் இயங்கும். கிறிஸ்தவ இயக்கங்கள் யாவும் இவ்வுலகின் சமுதாய ஒழுங்கு முறைகள் சீர் அழிந்து போகாமல் இருக்க உண்மையிலேயே பெரிதும் உழைத்திருக்கிறார்களே. அப்படி இருக்க நம்முடைய கிறிஸ்தவ இயக்கங்கள் யாவும் வீழ்ந்து போவதற்கு ஏன் தேவன் அனுமதித்தார் என்கிற கேள்வி எழும்பலாம்? அதுமட்டுமல்ல ஏன் இப்போது இருக்கிற ஒழுங்கு முறைகள் எல்லாம் கவிழ்த்துப் போட வேண்டும் என்றெல்லாம் கேள்விகள் எழும்பலாம். அராஜகம் மற்றும் குழப்பம் ஆகிய இவற்றை காட்டிலும் இப்போதைய ஒழுங்கு முறைகள் மேன்பட்டவைகளாயிற்றே என சிலர் வினாவலாம். வேதாகமம் இதற்கு என்ன விடை கூறுமென்றால் தேவன் இப்பிரச்சனைகளை வற்புறுத்துவது கிடையாது. ஆனால் இத்தகைய விளைவுகளை தாமாகவே சந்திக்க அவர் மனுக்குலத்தை அனுமதித்து விடுகிறார். இது போன்ற உபத்திரவங்களும் அழிவுகளும் தேவன் கொடுத்திருக்கும் தெய்வீக பிரமாணங்களை அலட்சியம் செய்வதின் விளைவாகவே ஏற்படுகின்றன. மத ஸ்தாபனங்கள் தங்களையே தேவனுடைய ராஜ்யமென்றும் உலகை ஆளுவதற்கு தெய்வீக வல்லமையும் அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ள ஒன்றாகவும் உரிமை கோருவது நியாயமற்ற, உரிமையற்ற ஒன்றாகும். இந்த தவறான உரிமை கோருதலும் அதனை செயல்படுத்த எடுத்த முயற்சியும் அதின் மீது பட்சிக்கும் "அக்கினியைக்" கொண்டு வரும். உலகமானது அன்பின் பிரமாணத்தை தள்ளி விட்டு "வல்லவன் வைத்ததே சட்டம்" என்ற தவறான நலைக்கு கீழ்ப்படிகிறது. அது மாபெரும் இரண்டு கட்சிகளுக்கு இடையேயான சண்டையை அவசரப்படுத்துவதின் மூலம் சமுதாயத்தைக் கவிழ்த்துப்போடும். அந்த இரு பெரும் பிரிவுகளின் ஒரு புறம் முதலாளித்துவமும் அதைச் சார்ந்த, கூட்டமைப்புகளும், அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். அதன் மற்றொரு பக்கத்தில் தொழில் சங்கங்களும், பொது மக்களும் திரண்டு இடம் பெற்றிருக்கின்றனர். ஒவ்வொருவரும் முடிவு காலம் நெருங்கிவிட்டது எனவும் ஆகையால் யுத்தமானது நடத்தப்பட வேண்டும் என்றும் உணருவார்கள். எந்தவித போதிய ஆதாரமும் இன்றி இவர்களில் ஒவ்வொருவரும் தங்களுக்குத்தான் வெற்றி என்று தன்னம்பிக்கையுடன் இருக்கின்றனர். வேதாகமத்தைப் பொறுத்தவரை நம்முடைய இன்றைய சமுதாய ஒழுங்கு முறைகள் முற்றிலும் உடைவுபடுவதே இதன் முடிவாகும். இதுவே "அக்கினியாக" அடையாளப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

## வர இருக்கும் நீதியான அரசாட்சி

### COMING REIGN OF RIGHTEOUSNESS

நமது தற்கால நாகரீகத்தின் அழிவில் மனுக்குலமானது தாங்கள் உயர்வாக கருதியிருந்த "அறிவின் யுகம்" (The Brain Age) தோல்வியடைந்ததால் அவர்களின் இருதயம் சலித்துப்போகும் என்று அவர்கள் இதுவரை காத்திருந்த தேவனுக்காக நோக்கமாயிருப்பார்கள் என்றும் கர்த்தர் தமது தீர்க்கதரிசியின் மூலம் குறிப்பிடுகிறார். வரஇருக்கும் நீதியான ஆட்சியை அறிந்து கொண்டு "இதோ. இவரே நம்முடைய தேவன்; இவருக்காக காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்." (ஏசா. 25 : 9) அடுத்து தீர்க்கதரிசி மேலும் கூறுவது "சகல ஜாதிகளுக்கும் விருப்பமானது வரும்." என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார் (ஆகாய் 2 : 7). எல்லா ஜாதிகளும் இது போன்ற செழிப்பான ஆசீர்வாதங்களை நாடுகின்றன. எல்லாரும் இந்த தயவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தின் மூலம் பெற்றுக் கொள்வார்கள். அதன்பிறகு மனுக்குலத்தின் ஆசீர்வாதம் துவங்கும். இந்த மேசியாவின் ராஜ்யம் மாம்ச கண்களால் காணக்கூடாததோர் ராஜ்யமாக இருக்கும். என்றாலும் இது சகல அதிகாரங்கள் கொண்டதாக இருக்கும். அவற்றின் செயல்பாடுகளின் மூலம் அது தெளிவாக வெளிப்படும். அதன் நீதியான நியாயத்தீர்ப்புகளுக்கு அடக்கி ஆளும் அதிகாரம் உண்டு. இவற்றின் ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலர் மூலமாக வந்தடையும். இதன் பரப்பு வியாபிக்கும். அதோடுகூட "பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்." நாம் நம்முடைய தலைப்பு வாக்கியத்தை மறக்கவில்லை. நாம் எதைச் சொன்னோமோ அவைகள் இவற்றிற்கு இசைந்து வருகின்றன. அதன் கருத்தை இன்னமும் தெளிவாக விளங்குவதற்கு மற்றும் ஓர் வார்த்தை இவற்றோடு சேர்க்க வேண்டும். உலக தோற்றமுதல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த தேவனுடைய இரகசியம் (எபே. 3 : 3-6; 5 : 23-32) இப்போது முடிவடைகிறது, பரிபூரணம் பட்டாயிற்று. இனி இது ஒதுபோதும் ஓர் இரகசியமாக இராது. "இனி காலம் செல்லாது (தாமதமாகாது)......... என தூதன் ஆணையிட்டுச் சொன்னான்" (வெளி. 10 : 6, 7). இதில் காலத்தின் முடிவிற்கு எந்த வித குறிப்புகளும் கிடையாது. காலம் ஒரு போதும் முடிவடைய முடியாது. மற்ற பல வேத வசனங்கள் நாம் யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என காட்டுகிறது. சபையானது முழுமையடைவதோடு, பூமியிலிருந்து சாபத்தை நீக்குதல் மற்றும் பூமிக்குரிய காரியங்கள் எல்லாவற்றின் மீதும் பொழியும் தேவ ஆசீர்வாதம் ஆகிய இவை சம்பந்தமான வேதாகமத்தின் மகிமையான வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறைவேற துவங்கும்.

***




# பாதாளம் வேதனைப்படுத்துவதற்குரிய இடம் அல்ல

## HELL NOT A PLACE OF TORMENT

*"மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக; அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக; அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது." சங். 55 : 15.*

பாதாளம் சதா காலங்களுக்கும் வேதனைக் கொடுக்கும் இடம் என்று நம்பும் அநேகருக்கு, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய தாவீது ராஜா, எவ்வாறு தனனுடைய சத்துருக்கள் உயிரோடே பாதாளத்திற்குச் செல்ல வேண்டுமென பிராத்திக்க முடிந்தது என்பதை விளங்கிக் கொள்வது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கின்றன (அப். 13 : 22). அவர்களை நரக வேதனைக்கு போகவிடாது அவன் ஜெபித்திருக்கலாம் என நீங்கள் கருதலாம். அவர்களும் பிற்காலத்தில் மரணம் அவர்களைத் தொடுவதற்கு முன்னர் இந்த அகோர நிலையை சிந்தித்து மன மாற்றம் செய்யகூடும் எனவும் நீங்கள் கருதலாம். இதுபோன்ற கருத்துக்கள் யாவும் இருண்ட காலங்களில் கொண்டு வரப்பட்ட மதப்போதனை சார்ந்ததாக இருக்குமேயானால், அதுவும் உண்மையிலே அவ்வாறு இருக்குமேயாகில் உண்மை யிலேயே தேவனுக்கு உகந்த தாசனாகிய தாவீது இத்தனை பயங்கரமானதோர் விண்ணப்பத்தை ஏன் ஏறெடுத்தார்.

பலருடைய எண்ணங்களின்படி பாதாளம் என்பது ஓர் வேதனை படக்கூடிய இடமாக கருதப்படுகிறது. அவர்களின் எண்ணப்படி அங்கு வேதனை குறைக்கப்படுவதில்லை, சதா காலத்திற்கும் சஞ்சலம் கொண்டதாக இருக்கும். எண்ணிக்கைக்கு அடங்காத மக்கட்கூட்டம் தாங்க முடியாத வேதனையால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பார்கள். துயரத்தில் இருப்பார் கள். உண்மையான அக்கினியால் வேதனைக்குட்படுத்தப் படுவார்கள். அல்லது அவர்களின் துயரம் துன்புறுத்துவ தோடல்லாமல் அவர்களின் மனச்சாட்சி அவர்களை சித்திரவதைச் செய்யும். என்றும் சிலர் கூறுவது இன்னும் மோசமாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அல்லாதோருக்கு இது போன்றதோர் இடத்தைதான் தேவன் திட்டமிட்டு வைத்திருக்கிறார் என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

இது போன்ற பயங்கரமான தீர்ப்பின்படிதான் மானிட இனத்தவர்களுள் பெரும்பான்மையினர் இது போன்றதோர் முடிவை போய் எட்டுகிறார்கள் என்றும், அவர்கள் நம்புகிறார்கள். இருப்பினும் இவர்களை இது போன்றதோர் துயரத்திலிருந்து விடுவிக்க ஒரு சிறிது முயற்சிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதான கிறிஸ்தவ சபைகள் எனக் கருதப்படும் மத வழிபாட்டில் இன்னமும் தொடர்ந்து "எரி நரகம்" உண்டு என்கிற மதப் போதனைகளை தங்களின் வழிபாட்டு முறையில் அனுசரித்து வந்தாலும் சமுதாய சந்தோஷங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் அதிக நேரத்தை செலவழிக்கிறார்கள். ஆனால் அவர்களின் மார்க்க விதிகளின்படி இதுபோன்ற காலங்களை சதா காலங்களுக்கும் வேதனைப்படுவோரை எரிநரகத்திலிருந்து காப்பாற்றுவதற்கு கட்டுக்கடங்காத முயற்சிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். மேலும் கூடுதலாக கூறுவ தென்றால் எரிநரக போதனைகளை புகட்டுவோரிடம் இன்னமும் போதுமான அளவிற்கு பண வசதிகள் இருக்கின்றது. இதனை இவர்கள் தங்கள் ஜீவனத்தின் பெருமைக்கும், கண்களின் இச்சைகளுக்கும் செலவிடு கிறார்கள். (1 யோவா. 2 : 16). இப்படி செலவழிக்கும் பணத்தை "ஆத்துமாக்களை" ஆதாயப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு செலவிடலாமே. உதாரணத் திற்கு கூறுவதென்றால்




அவர்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் நவநாகரீகமாகவும் ஆடம்பரமாகவும் விலை மதிப்பு அதிகம் கொண்ட வையாகவும் இருக்கும். பலவித களியாட்டங்களுக்கு வழிவகுத்து கொடுப்பார்கள். பாடகர் குழுவும் வாத்திய

இசை கருவிகளும் சிறந்த முறையில் இருக்கும். விலை உயர்ந்த மேலாடைகள் அணிந்திருப் பார்கள். பண ஆசை கொண்டவராக இருப்பார்கள். உலகப் பிரகாரமான பட்டம், பதவி மரியாதை இவற்றை அடைய பாடுபடுவார்கள். முடிவாக ஒன்றைக் கூறி முடிக்க வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதுபோன்ற எரிநரக போதனைகளை விசுவாசிப்பது கிடையாது. அவர்களின் மதப் போதனைகளுள் இந்த "எரிநரக" கொள்கை தெளிவாக எழுதப்பட்டிருந்தாலும் பெரும்பா லான கிறிஸ்தவர்கள் இதனை நம்புவது கிடையாது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மாத்திர மல்ல அவர்களின் போதகர்மார்களும் நம்புவதில்லை. அது மாத்திரமல்ல அன்பும் இரக்கமும் கொண்ட தேவன் எவரையும் அது போன்ற நிலைமைக்கு அனுப்புவது கிடையாது என்றும் அவர்கள் நம்புவது கிடையாது.

## பாதாளம் என்பதின் உண்மைப் பொருள்

### THE TRUE MEANING OF HELL

ஆனால் நாம் இப்போது பாதாளம் என்கிற வார்த்தைகளின் உண்மைப் பொருள் என்ன என்பதைக் காண்போம். இந்த இடத்திற்கு தனது சத்துருக்கள் செல்லும்படியாக அதாவது திடீரென மரிக்கும்படியாக அவர்களுக்காக தாவீது மன்றாடினான். வேதாகமத்தில் KJV-ல் hell பாதாளம் என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டில் 31 முறை வருகிறது. இந்த வார்த்தை வரும் போதெல்லாம் அதனை எபிரேய மொழிக்கு மொழிபெயர்க்கும் போது sheol ஷியோல் என்கிற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆங்கில வேதாகமத்திலும் இந்த வார்த்தை 31 முறை கல்லறை என மொழி பெயர்த்திருக்கின்றனர். 3 இடங்களில் இந்த வார்த்தை ஷியோல் ஆங்கில மொழியில் pit குழி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதில் ஷியோல் என்கிற எபிரேய வார்த்தை அக்கினிக் கடல் என்றோ கந்தகம் போன்ற எரி பொருள் கொண்டு எரிந்து கொண்டிருக்கும் இடம் என்றோ அல்லது அது சம்பந்தமாக அதைப் பிரதிபலிக்கும் ஏதோ ஒன்றையோ குறிக்கவில்லை. அதற்கு நேர் மாறாக, எப்போதும் எரிந்து கொண்டும் துன்புறுத்தும் இடம் என்கிற விதத்தில் வேதாகமம் சித்தரித்துக் காட்டாமல் இது ஓர் "காரிருளின்" நிலை அல்லது அதன் தன்மை என்றே வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (யோபு 19-22). பயங்கரமும் அருவெருப்பும் கூக்குரலும், வேதனையின் குரலும் கேட்கும் இடமாக விவரிக்காமல் அது மௌனத்தின் நிலை அல்லது அதின் தன்மை என்றே விவரிக்கப்பட்டுள்ளது (சங். 115 : 17). இந்த இடம் வேதனைப்படுவதற்குரிய இடமாகவோ, கஷ்டப்படும் படியானதோர் இடமாகவோ அல்லது துயரத்தில் இருக்கும் இடமாகவோ கூறாமல் சில வேத வாக்கியங்கள் இதனை மறதியான நிலை அல்லது அதின் தன்மை என்று விளக்குகின்றன (சங். 88 : 11, 12). "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் ......... போகிற பாதாளத்திலே (Sheol) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லை." (பிர. 9 : 5, 10) Sheol ஷியோல் என்கிற வார்த்தையின் பொருள் என்னவென்றால் மரணத்தில் ஒரு நபர் தன்னறிவில்லாமல் இருக்கும் நிலை என்பதாகும்.

கிரேக்க மொழியில் இதனை Hades ஹேடீஸ் என்று கூறுவர். இது புதிய ஏற்பாட்டில் 11 முறை இது வருகிறது. இதில் ஆங்கில வேதாகமத்தில் KJV-ல் 10 முறை "Hell ஹெல் என்றும் ஒரு முறை கல்லறை (grave) என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை களைக் கொண்டு இந்த 11 முறைகளிலும் இந்த கிரேக்க வார்த்தை ஹேடீஸ் Hades எபிரேய வார்த்தை Sheol ஷியோலுக்கு இணையாக வருகிறதைக் காணலாம். உதாரணத்திற்கு அப். 2 : 27-ல் குறிப்பிடலாம். "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்." இது போன்று சங். 16 : 10-லும் காணலாம். "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்." இங்கு பாதாளம் என்பது ஷியோல் ஆகும். மேலும் கூடுதலாக மற்றொரு வேத பகுதிக்கு வருவோம். 1கொரி. 15 : 54, 55. "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே (ஹேடீஸ்) உன் ஜெயம் எங்கே? இது ஏசா. 25 : 8-ஐ பற்றிய குறிப்பாகும். "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். அந்தப் பிரகாரம் ஓசியா 13 : 14-ம் பின் வருமாறு கூறுகிறது. "மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே?" 1 கொரி. 15 : 55. KJV ஆங்கில வேதாகமத்தின் குறிப்பெழுதும் ஓரத்தில் (grave) கல்லறை என்ற சொல்லுக்கு பதிலாக (hell) பாதாளம் என்று உபயோகிக்கலாம் என்று கொடுக்கப்பட் டுள்ளதைக் கவனியுங்கள். அது (hades) ஹேடீஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கு மாற்று வார்த்தையாக கொடுக்கப்பட் டுள்ளது. மேலும் சங். 49 : 15; 55 : 15; 86 : 13; ஏசா. 14 : 9; யோனா 2 : 2 ஆகிய வசனங் களுக்கு ஆங்கில வேதாகமத்தின் குறிப்பெழு தும் ஓரத்தில் எபிரேய வார்த்தையாகிய ஷியோல் sheol, (hell) பாதாளம் அல்லது (grave) கல்லறை என்று மொழிபெயர்க்கலாம் என்று கொடுக்கப்பட்டுள்ளது.

# கிறிஸ்தவ குருமார்கள் நரகம் (HELL) என்கிற வார்த்தையின் உண்மைப் பொருளை அறிவர்

## MINISTERS KNOW THE TRUTH ON HELL

"எரி நரகத்தை பிரசங்கிக்கிற மத குருமார்கள் அவர்களுடைய வேதாகமங்களில் உள்ள இந்த வசனங்களில் காட்டப்பட்டுள்ளபடி sheol ஷியோல் மற்றும் ஹேடீஸ் (hades) ஆகிய வார்த்தைகள் சரியாக பாதாளம் அல்லது கல்லறை என்று மொழிபெயர்க்கப் பட வேண்டு மென்று அறியாது இருப்பார்களா? அப்படியென்றால் அவர்கள் ஏன் அதனை அறிவிக்க வில்லை? எவ்வொரு தேவனுடைய ஊழியக்காரனும், இந்த வார்த்தைகளை ஆராயாதவர்கள் தவிர மற்றவர்கள் இதுவே உண்மை யானது என்பதை அறிவார்கள். ஒரு சிலர் நீங்கலாக பெரும்பாலோர் அறிவது என்ன வென்றால் ஒருவர் மரிக்கும்போது – அவர் நல்லவரோ, கெட்டவரோ, மரித்தால், அவர் உண்மையிலேயே மரணமடைகிறார். இப்படித்தான் வேதாகமத்தின் நரகம் குறிப்பிடுகிறது. (sheol or hades ஷியோல் அல்லது ஹேடீஸ். ஆதி. 37 : 35; 42 : 38; 44 : 29, 31; யோபு 14 : 13; 17 : 13; சங். 86 : 13; ஏசா. 38 : 10; அப். 2 : 29-34). அதாவது அவர் நித்திரையாய் சுயநினைவு இல்லாமல் மரணம் என்கிற நித்திரையில், உயிர்த்தெழுதலுக்காக காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிவிக் கிறது. (தானி. 12 : 2; யோவா. 11 : 11-14; அப். 7 : 60; 1 கொரி. 15 : 6, 18, 20, 51; 1 தெச. 4 : 13, 15; 2 பேது. 3 : 4) "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் (பிர. 9 : 5). அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களை கவனியான்" (யோபு 14 : 21). "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை. (ஷியோல்) பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்" (சங். 6 : 5). "துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் (ஷியோல்) பாதாளத்தில் மவுனமாயிருக் கட்டும்" (சங். 31 : 17). "மரித்தவர்களும் மரணத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங். 115 : 17). "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்கு திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம்" (சங். 146 : 4). பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குபவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை.......... உயிரோடிருக்கிறவன் உயிரோடிருக்கிறவனே உம்மைத் துதிப்பான். (ஏசா. 38 : 18, 19).



யோபு 14:21

எரிநரகத்தைக் குறித்துப் பேசுகிற பேச்சாளர்களும் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதை அறிவார்கள் (ரோம. 6 : 23). அத்துடன் "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" (எசே. 18 : 4, 20) என்பதையும் வேத வாக்கியங்களின்படி "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் (1 கொரி. 15 : 3) என்பதை யும் அறிவார்கள். மேலும் கூடுதலாக கூறுவது என்ன வென்றால், "அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்." (ஏசா. 53 : 10, 12) "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" (அப். 2 : 27) ஆகிய இந்த வசனங்களின் மூலம் இயேசுவும் சில காலங்களை பாதாளத்தில் செலவிட்டார் என்று வேதாகமம் அறிவிக்கிறது. ஏன் பிரசங்கிமார்கள் ஜனங்களுக்கு இந்த விஷயங்களில் இருக்கும் உண்மையை உரைக்க மறுக்கிறார்கள்? மரணம் என்றால் இந்த ஜீவியத்தின் முடிவு. அதுவும் உயிர்த்தெழுதல் வரும் வரை தான் என்று ஏன் கூறுவதில்லை? கீழ்ப்படியாமல் போனால் "சாகவே சாவாய்" (ஆதி. 2 : 17) என்று ஆதாமிற்கு கொடுக்கப்பட்ட தெளி வான தேவனுடைய வாக்கியத்தை ஏன் எதிர்க்கவும் திரிக்கவும் செய்கின்றனர். ஆதாம் நித்திய வேதனை அடைந்ததாக ஏன் திரித்து அர்த்தப்படுத்துகிறார்கள். "நீ உண்மையிலே சாகமாட்டாய் – உனக்கு அழியாமை உண்டு. தேவனால் கூட உன்னை அழிக்க முடியாது (ஆதி. 3 : 4) என சாத்தான் கூறிய பொய்யை ஏன் பிரசங்கிக்கிறார்கள்? இந்த போதகர்கள் மக்களிடத்தில் இவ்விதமாக கூறி அவர்களை பயமுறுத்தி தங்கள் கூட்டங்களுக்கு வருவோரிடம் "கிறிஸ்துவிற்கு உங்களை ஒப்பு கொடுங்கள்" என்று இவ்வாறெல்லாம் கூறி அநேகரை மன மாற்றம் செய்யப் பார்க்கிறார்களா? ஷியோல் sheol அல்லது ஹேடீஸ் hades என்றால் நித்திய ஜீவனை நரக வேதனை உள்ள இடத்தில் அனுபவிப்பது என இவ்வாறெல்லாம் வேதாகமம் போதிப்பது கிடையாது. இயேசு மரித்ததும் பாதாளத்தில் அவர் நரக வேதனை அனுபவிக்கும் நிலைக்கு கொண்டு போகப்படவில்லை. அவர் கல்லறையில் 3 ஆம் நாளில் நடக்க இருக்கும் உயிர்த்தெழுதலுக்காக காத்துக் கொண்டிருந்தார்.

(மத். 12 : 40; 16 : 21; 20 : 19; மாற். 9 : 31; லூக். 9 : 22; 18 : 33).

கிறிஸ்தவ மண்டலத்தைச் சேர்ந்த புகழ்மிக்க சுவிசேஷகர்களில் ஒருவர் ஆயிரக்கணக்கானோரை தம் வசம் இழுக்கக்கூடியவர். அவரிடம் தனிமையில் அழைத்து sheol and hades ஷியோல், ஹேடீஸ் என்கிற வார்த்தை யாரும் காணக்கூடாத நிலையை குறிப்பது அல்லது கல்லறைக்குழி என்பதை அறிவீரோ? அப்படியென்றால் நரகம் என்று ஒன்று உண்டு, அங்கு நரக வேதனை உண்டு என்றெல்லாம் ஏன் போதிக்கிறீர் என வினாவியபோது அவர் விடை கூறியதாவது தனக்கு வேதாகமத்தில் பாதாளம் hell என்கிற வார்த்தைக் குறித்த உண்மைப் பொருள் தெரியும் என ஒப்புக் கொண்டார். மேலும் அவர் கூறியதாவது அது போன்ற கருத்துக்கள் இன்னமும் பரவலாக யாவரும் தெரிகிற விதத்தில் வெளிவர வில்லை அதுமட்டுமல்ல இதன் உண்மையைப் பிரசங்கித்தால் முன் அணியில் இருக்கும் பேர் கறிஸ்தவ சபைகள் தன்னை ஏற்றுக் கொள்ளாமல் அகற்றிவிடுவர். அதன் விளைவாக தனக்கு இருந்து வரும் மிகப் பெரிய செல்வாக்கை இழக்க நேரிடும். மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது என்னுடைய வயிற்று பிழைப்பே இது போன்ற தவறான போதனைகளை சொல்லி வருவதில் தான் சார்ந்திருக்கிறது என்றார். இவர் கூலிக்குவேலை செய்பவர். அத்துடன் ஓர் கள்ளப் போதகர். "எரிகிற நரகத்திலிருந்து ஆத்துமாக்களை ரட்சிக்கிறவர் - (மாறாக பயமுறுத்துகிறவர்) என்று தனக்கு பேரும் புகழும் தேடிக் கொள்வதற்கு தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு இழுக்கு உண்டாக்கும் ஊழியக்காரராக வாழ்கிறார். இவ்வாறு "எரி நரகத்தை" குறித்துப் பிரசங்கிப்போர் அனைவரும் மாய்மாலம் செய்யும் பிரசங்கியார் எனக் கூற மாட்டோம். ஆனால் சிலர் அவ்வாறு இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் சிலர் அறியாமையினாலோ அல்லது சாத்தானுடைய வஞ்சகத்தினால் ஏமாற்றப்பட்டவர்களாக வோ இருப்பார்கள் என நாங்கள் கருதுகிறோம். துன்மார்க்க ருக்கு தண்டனையாக - வாழ்க்கையின் முடிவு - அதாவது மரணம் என்பதற்கு பதிலாக நித்திய வேதனை என்ற போதனையை பிரசங்கிப்பவர்கள் தாங்கள் நிச்சயமாகவே தேவனுடைய சித்தத்தின்படியே செய்கிறதாக நினைக்கிறார்கள்.

## கெஹென்னா என்கிற கிரேக்க பதம் பற்றிய ஆராய்ச்சி

### THE GREEK WORD "GEHENNA" EXAMINED

மற்றொரு கிரேக்க வார்த்தையாகிய கெஹென் னாவும் தவறாக மொழிபெயர்க்கப்பட்டதினால் அநேக குழப்பங்கள் நேர்ந்துள்ளன. இந்த வார்த்தையும் வேதாகமத்தில் சில இடங்களில் 'எரிநரகம்' என்கிற அர்த்தத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு முறை கீழ்க்கண்ட வேத பகுதிகளில் இது தவறாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. மத். 5 : 22, 29, 30; 10 : 28; 18 : 9; 23 : 15, 33; மாற். 9 : 43-48; லூக். 12 : 5; யாக். 3 : 6 ge-hinnom கீஹினோம் என்கிற எபிரேய வார்த்தையை தான் கிரேக்க வார்த்தையின் எழுத்துக்கள் வடிவில் gehenna கெஹென் ல் ஜீவனை அழிப்பதற்கே அடையாளமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. "கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்." (சங். 145 : 20).

## மரணத்திலிருந்து ஆத்துமாக்களை ரட்சிப்பது

### SAVING SOULS FROM DEATH

ஆத்துமாக்களை இரட்சிப்பது என்பது ஓர் ஆசீர்வாதமான வேலையாகும். ஆனால் சதா காலமும் எரிந்து கொண்டிருக்கிற நரக வேதனையிலிருந்து ஆத்துமாக்களை ரட்சிப்பதாக சிந்திப்பது தப்பறை யாகும். "தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிற வன் ஓர் ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்." (யாக். 5 : 20) இங்கு மரணத்தி னின்று (வேதனையி லிருந்து அல்ல) காக்கப்படுவது என்று சொல்லப்பட்டிருப் பது இரண்டாம் மரணம். (1 தீமோ. 2 : 6; எபி. 2 : 9). (Hell) பாதாளமும் ("கல்லறை குழி" - ஷியோல் அல்லது ஹேடீஸ்) அழிக்கப்பட்டுவிடும் (ஓசியா 13 : 14; வெளி. 20 : 13, 14). இயேசுவே "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற அந்த மெய்யான ஒளி". அவர் எல்லா மனுஷரையும் "தம்மிடம் இழுத்துக்கொள் வார்" (யோவா. 1: 9) ஆனால் "அந்த தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ (கீழ்ப்படியாமல் போகிறவன் எவனோ) அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" (அப். 3 : 23). "பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள்" (சங். 104 : 35). திருத்த முடியாத பாவிகளின் நிலை அவர்கள் "அறுப்புண்டு போவதே ஆகும்" (சங். 37 : 22, 28). அந்த நபர், அல்லது அந்த ஆத்துமா "அறுப்புண்டு போவார்" (லேவி. 22 : 3; எண். 15 : 30). அவர்கள் "இரண்டுதரம் செத்து வேறற்று போனவர்கள்" ஆவார்கள் (யூதா 12). துன்மார்க்கர்கள் அழிவிற்குள் போவார்கள் அதாவது

இல்லாமல் போவார்கள். "அவைகள் விருதாவிலே பரவி ஒன்றும் இல்லாமற்போகும்" (யோபு 6 : 15-18). "அப்போது துன்மார்க்கன் இரான்" (சங். 37 : 10, 36)

"அவர்கள் குடித்து விழுங்குவார்கள், இராதவர்களைப் போல் இருப்பார்கள்" (ஒபதியா 16).

## அக்கினிக் கடல் – இரண்டாம் மரணம்

### THE LAKE OF FIRE - THE SECOND DEATH

அக்கினிக் கடல் ஒன்று உண்டு என்று வேதம் போதிக்கிறதா? ஆம் ஆனால் வேதாகமம் அது என்ன என்று கூட விளக்கம் கொடுக்கிறது. "அது தான் இரண்டாம் மரணம்" (வெளி. 20 : 14, 15; 21 : 8) அது இரண்டாம் ஜீவியம் அல்ல. இங்கு அக்கினி முழுமையான அழிவைக் காட்டுவதற்கு ஓர் அடையாளமாக காட்டப்பட்டி ருக்கிறது. (செப். 3 : 8, 9; மத். 3 : 10-12) பாவத்தின் சம்பளம் என்று தங்களின் போதனையை அடிப்படையாக வைத்து பாவத்திற்கு கிடைக்கும் சம்பளம் சதா காலத்திற்கும் எரிநரகத்தில் வேதனைப் படுவது என்று போதித்து வருகின்றனர். இதற்கு உறுதுணையாக வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் உவமைகளையும் உவமானங்களையும் தவறுதலாக பயன்படுத்தி சரியான வேத போதனையை புகட்டாமல் தவறுகளைப் போதிக்கின்றனர். அவர்கள் வேதாகம நரகத்தோடு இருண்ட யுக தப்பறைகளை சேர்த்து பாதாளமானது நித்திய வேதனைக்குரிய இடமாக காணப்படும்படியாக செய்கின்றனர். வெளி. 20 : 10 ஆம் வசனம் காட்டுவது என்னவென்றால் பிசாசு, மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோரும் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவார்கள் (அதாவது அவர்கள் முற்றிலுமாக முழுமையாக நித்திய அழிவை அடைவார்கள்.) இதனுள் மரணமும், பாதாளமும் (ஹேடீஸ்) தள்ளப்படும். வெளி. 20 : 10-ல் உள்ள "வாதிக்கப்படுவார்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை சம்பந்தமான விளக்கத்தை ஜீவன்-மரணம்-அதற்குப்பின் (Life - Death - Here after) என்கிற புத்தகத்தையும், வேதாகமத்தின் நரகம் (The Hell of the Bible) என்கிற புத்தகத்தையும் பார்க்கவும். பொதுவாக "எரிநரகம்" உண்டு என்று போதிப்பவர்கள் லூக். 16 : 19-31-ல் வரும் நரகத்தில் ஐசுவரியவான் என்கிற உவமையில் சொல்லப்பட்டிருக்கும் நரகம் (hell) என்கிற வார்த்தைக்கு சொல்லர்த்தம் வழங்கி அவ்வாறு உண்மையில் சம்பவிப்பதாக கருதுகின்றனர். ஆனால் மாறாக வேதாகமமோ அது ஒரு உவமை என்று காட்டுகிறது. இயேசு அப்போது போதித்த சில விஷயங்களை விளக்குவதற்காக இவ்வுதாரணத்தைக் கொடுத்தார். இந்த உவமையைப் பற்றிய முழு விளக்கமும் அதனை எவ்வாறு தக்க முறையில் அப்பியாசிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள B.S.371-ஐ பார்க்கவும். (வேண்டுமென்று கேட்பவருக்கு ஒரு பிரதி இலவசமாக கொடுக்கப்படும்).

## தனது சத்துருக்களுக்காக தாவீது விண்ணப்பித்த ஜெபம்

### DAVID'S PRAYER FOR HIS ENEMIES

சங்கீதம் 55-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி தாவீது துன்மார்க்கருடைய கிரியைகளை கண்டார். அவர்கள் விரைவில் மரணம் அடைய வேண்டும் என்று அவர்களுக்காக ஜெபித்தார். மேலும் அவ்வாறாக மரிப்பதின் மூலம் அவர்கள் மேலும் பொல்லாங்கு செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டனர். தாவீது அவ்விதம் ஜெபிக்கையில் அந்த விரோதிகள் சதா காலமும் வேதனைப்படும் இடத்திற்கு செல்ல வேண்டும் என விண்ணப்பித்திருந்தால் அது அவரது பயங்கரமான மனதையும் இருதயத்தையும் வெளிப்படுத்துமல்லவா. சிலர் போதித்து வருகிறது போல யேகோவா மரித்தவர்களை திட்டமிட்டு முடிவில்லாத வாதிக்கப்படுதலுக்கு அனுப்புவார் என்றால், அது மேற்கூறின விஷயத்தைவிட 10 ஆயிரம் மடங்கு அச்சம் தரக்கூடியதாக இருக்கும். கலா. 5: 12-ல் அறிவிக்கப்பட்டுள்ள பரிசுத்த பவுலின் கருத்தும் தாவீதின் கருத்தும் ஒத்திருப்பதை காணலாம். பரிசுத்த பவுல் உரைப்பதாவது "உங்களை கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்." அதன் பொருள் என்னவென்றால் அவர்கள் அதிவிரைவில் மரணம் என்கிற நித்திரையைப் போய் அடையட்டும். மேலும் கூடுதலாக தேவன் கூறுவதாவது "நான் நல்லதென்று கண்டபடியால் அவர்களை ஒழித்து விட்டேன்" (எசே. 16 : 50). இங்கு நாம் தேடும் கேள்விக்கு விடையைக் காணலாம். அந்த உண்மை என்னவென்றால் வர இருக்கும் யுகத்தின்போது உலகத்தாரின் சோதனை காலம் தொடங்கும். அது தான் ஆயிர வருட நியாயத்தீர்ப்பு நாள். (2 தீமோ. 4 : 1; 2 பேது. 3 : 7, 8; வெளி. 5 : 9, 10). இதுவே ஆயிர வருட யுகம். அதன்படி இந்த ஜீவிய காலத்தின் போது முழுமையாகவும், பரிபூரணமாகவும் இரட்சிப்படைய வாய்ப்பு பெறாதவர்கள், இதில் தாவீதின் சத்துருக்களும் அடங்குவர் - யாவருக்கும் தேவனைக் குறித்தும் அவரது சத்தியங்களைக் குறித்தும் அறிந்து கொள்வதற்கு இந்த ஆயிர வருட காலத்தின் போது வாய்ப்பு அளிக்கப்படும். அதன் பிறகு சாதகமான சூழ்நிலையின் கீழ் கிறிஸ்துவின் மூலம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள அவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படும். (1 தீமோ. 2 : 4, 6; சங். 136; வெளி. 20 : 2, 3)

நாம் மேலும் கூடுதலாக வேதாகமத்தை படிக்கையில் நாம் தேவனுடைய வியக்கத்தகுந்ததும் மகத்துவமும் கொண்ட அவரது ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவற்றை அறிய முடியும்போது நாம் மேலும் அதிகமாக தேவனை நேசிப்போம். நித்திய வேதனை என்கிற (நரகம் என்று அடிக்கடி தவறாக அழைக்கப்படுகிற) போதனை ஒவ்வொரு முறை போதிக்கப்படும் போதெல்லாம் தேவனுடைய குண நலன் களுக்கு பங்கம் விளைவிக்கின்றது. இவ்வாறு பெயரள விற்கு கிறிஸ்தவர்களாக வாழ்வோர் தங்களுக்குத் தானே உண்மையுடையவராகவும் அத்துடன் தேவனுக்கும் உண்மையுடையவராக இருப்பார்களேயாகில், "அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையா யிருக்கிறது." (ஏசா. 29 : 13 NKJ) என்பதை அதிவிரைவில் கற்றுக் கொள்வார்கள். தேவனே சத்தியபரர் என எல்லாரும் தீர்மானம் கொள்வார்களே யானால் அது எந்த மனுஷனும் பொய்யன் என்பதை நிருபிக்கும். (ரோம. 3 : 4). அவ்வாறு நேரிடுகை யில் புறஜாதியாரிடமிருந்து அவர்கள் பெற்ற தவறான மதப் போதனைகளையும், பாரம்பரிய சடங்காச சாரங்களை யும் தங்களிடமிருந்து புறம்பே தள்ளிப் போடுவார்கள். பரிசுத்த வேதாகம வார்த்தை களைப் படிப்பார்கள். இதற்கு முன்னர் இராத அளவிற்கு பரிசுத்த வார்த்தையானது படிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும். தேவனுடைய குணநலன்கள் தவறாக எடுத்துக்காட்டப்பட்டு இழுக்கடைந்ததற்கு பதிலாக அவை சரியாக கனப்படுத்தப்பட்டு துதிக்கப்படும். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங் கள், தேவன் துன்பப்படுத்துகிற தேவன் அல்ல.

***



# ஓர் கிறிஸ்தவ வீடு

## A CHRISTIAN HOME

"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" - பிர. 12 : 1

ஒரு காலத்தில் மானிட குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்கள் சுயநலத்திலிருந்தும், கொடுக்கல் வாங்கலிலிருந்து வரும் சண்டை சச்சரவுகளிலிருந்தும் மற்றும் உலகத்திலுள்ள அலுவல்களிலும் இருந்தும் விடுபட்டிருந்தனர். அன்றைய காலங்களில் இருந்து வந்த குடும்ப ஒழுங்கு முறைகள் இப்போது இருப்ப தில்லை. அவைகள் கடந்து போன விஷயங்களாகி விட்டன. இதன் விளைவாக சடுதியில் ஓர் சரிவு ஏற்பட்டுள்ளது. இச்சரிவு சுயநலத்தையும் பாவத்தையும் அதன் உச்சத்திற்கும் போய் எட்டிவிட்டது. இதன் விளைவு தாயாரை மாத்திரம் சம்பந்தப்பட்டதோடு இராமல் ஓர் வீட்டில் எங்கெல்லாம் ஒரு தாயின் குறுக்கிடு ஏற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இதன் பாதிப்பு இருந்து வந்திருக்கிறது. இந்தப் பாதிப்பு கூடுதலாகவோ குறைச்சலாகவோ குழந்தைகளுக்கு கெடுதியாக முடிந்திருக்கிறது.

ஆண்டவரால் தங்கள் கைகளில் கொடுக்கப் பட்டுள்ள நன்மை செய்யக் கூடிய மகா வல்லமையை தாய்மார்கள் பாராட்ட வேண்டும். தொட்டிலை ஆட்டும் கரமே உலகையே ஆதிக்கம் செலுத்தும் கரம் என்பதை அவர்கள் உணர வேண்டும். இதனை அறிந்து கொள்வதற்கும், இறைவனால் இவர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பயன்படுத்துவதே தெய்வீக ஒழுங்கு முறைகளுக்கு ஓர் தக்க விதத்தில் பிரதியுத்திரம் கொடுப்பதாகும். நம் ஆண்டவரின் வார்த்தைக்கும் அதன் மூலம் தெய்வீக ஒழுங்கு முறைகளுக்கும் இது போன்ற விஷயங்களுக்கு மாத்திரமல்ல இதர காரியங்களுக்கும் கொடுக்கப்படும் ஆலோசனைகள் பெரும் அளவில் அலட்சியமாக கைவிடப்படுகிறது என்பதே வேதனையான ஒன்றாகும். இந்த பரிதாபகரத்திற்குரிய உலகம் தன்னால் இயன்ற மட்டும் தனக்கு தெரிந்ததை செய்து வருகிறது.

கிறிஸ்தவ தாய் தகப்பன்மார்கள் குறிப்பாக தங்களின் அறிவுக் கண்கள் திறக்கப்பட்டிருந்தால் தேவனுடைய குணாதிசயங்களையும் தெய்வீக திட்டத்தை பெரும் அளவிற்கு அறியும் ஆற்றலை அடைவர். அப்படிப்பட்டவர்கள் தங்கள் குழந்தைகளை நல்வழிபடுத்தி வளர்த்து வருவதற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தருணங்களையும் வாய்ப்பை யும் பயன்படுத்திக் கொள்வதற்கு இவர்கள் விரைவில் செயல்பட வேண்டும் - இது தேவனால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பு ஆகும். எவரும் இதுபோன்றதோர் வேலையை சிறியதும் முக்கியத்துவம் இல்லாததென்றும் செல்வாக்கு இல்லாததென்றும் கருதலாகாது. சிறுவர்கள் பெரியோரை கனம் பண்ணுவதற்கும் தேவனுக்கும் பெற்றோருக்கும் தங்கப் பிரமாணத்திற்கும், கீழ்ப்படியுமாறு பழக்குவதே

மெச்சத்தகுந்ததாகும். ஒழுங்கு முறைகள், காலம் தவறாது கடமைகளை செய்தல், உண்மை பேசுதல் போன்ற நற்பண்புகள் அவர்களுடைய சொந்த வாழ்க்கையை ஆசீர்வாதம் பெற்றதாக ஆக்க அவர்களை ஆயத்தஞ்செய்யும். அவர்களுடைய இந்த செல்வாக்கு சமுதாயத்திற்கும் வியாபித்து செல்லும்.

குடும்ப வட்டாரங்களைத் தாண்டி இது போன்ற நற்பண்புகளைப் புகுத்துவதற்கு வழியேதுவும் இல்லாமல் போனாலும், சிறுவர்களுக்கு இது போன்றவற்றை பழக்குவிப்பதால் சமாதானம், செல்வாக்கும், அன்பினால் கட்டப்பட்ட வீடு ஆகிய காரியங்கள் ஏற்படும். தகப்பன் குடும்பத்தலைவராக தன்னுடைய பொறுப்புகளை ஏற்று செயல்பட வேண்டும். தாயும் தகப்பனும் குடும்பத்தை வழிநடத்திச் செல்வதற்கு ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும். கடந்த காலங்களில் குழந்தைகளை சீராக வளர்த்து கொண்டுவரும் பொறுப்பு ஒரு தாய்க்கு இருந்து வந்தது. ஆனால் இன்றைய நாட்களில் அவ்வாறு அல்ல. அவளுக்கு கூடுதலாக மற்றொரு பொறுப்பும் இருக்கிறது. அது என்னவென்றால் உலக பொருளாதார மாற்றத்தினிமித்தம் தந்தையோடு சேர்ந்து தாயும் தங்களின் ஜீவிய காலங்களை கடத்த வருவாயைத் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையினால் ஒரு குடும்பத்தில் தந்தை மாத்திரமே வருவாயை கொண்டு வந்து குடும்ப பாரத்தை தாங்குகிறார் என கருத இயலாது மற்றும் அநேக குடும்பங்களில் இதர கடமைகளையும் தந்தை ஆற்றி வருகிறார். அதோடுகூட பிள்ளைகளை வளர்த்து கொண்டு வருவதில் முன்பைவிட இப்போது அவருக்கு அக்கரை அதிகம். அநேக குடும்பங்களில் பிள்ளைகளை பழக்கும் பொறுப்பை பங்கீடு செய்து அதற்கு பொறுப்பும் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. கிறிஸ்தவனுக்கு அவனது குடும்பம் கவிழ்ந்து விடாதபடிக்கு அதனை சரிநிலையில் வைத்து கொண்டு செல்ல தேவையான உதவிகளையும் வழிநடத்துதலையும் நமதாண்டவர் கூடுதலாக கொடுப்பது, இன்றியமையாததாக இருக்கிறது. அநேக குடும்பங்களில் நமதாண்டவரின் ஒத்தாசை இல்லாமல் இருப்பதால் அங்கு கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லாமல் போகிறது. ஆகவே அவர்களின் இல்லங்கள் ஓர் குடும்பம் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இயங்குவதில்லை. அநேக பெற்றோர்கள் அன்பைக் குறித்து தவறான கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள். அத்துடன் பிள்ளைகளை மனம் போன போக்கில் போக விட்டுவிடுகிறார்கள். ஆகவே அநேக குடும்பங்களில் குழந்தைகள் தெய்வ பயமின்றி வாழ்கிறார்கள். பெற்றோருக்கும் மரியாதை கொடுப்பது கிடையாது. மற்றவர்களின் உரிமைகளிலும் அக்கரை காட்டுவது கிடையாது. அத்துடன் தன் அயலானைக் குறித்து எண்ணுவதும் கிடையாது. இன்றைய உலகில் பல இடங்களில் சட்டம், ஒழுங்கு ஆகியவை இல்லாமல் இருப்பதற்கும், அராஜகத்தின் ஆவி எங்கும் வெளிப்படுவதற்கும் இதுவே பெரிதும் காரணமாக இருக்கிறது.

## உன் வாலிப பிராயத்திலே

### IN THE DAYS OF YOUR YOUTH


நம்முடைய பாடத்திற்கு தெரிந்து கொண்ட தங்க வாக்கியம் ஒவ்வொரு குடும்பங்களிலும் அதன் முக்கியத்துவத்தை உணரச் செய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனது சிருஷ்டிகரை கனம் செய்ய வேண்டும் என்பதைக் கற்று அதனை நினைவிற்கு கொண்டு வர முயலும்போது தன்னிடத்தில் இருக்கும் குறைபாடுகளை அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அடுத்து இதுபோன்ற குறைபாடுகள் எவ்வாறு ஏற்பட்டது என சிந்திப்பான். அத்துடன் பாவம் என்கிற சாபமே மரணத்தை தன் மீதும் உலகத்தார் மேலும் கொண்டுவர செய்திருக்கிறது. இதுவே பூமியில் ஒவ்வொரு முன்னேற்றத்தை கொண்டு வர விடாமல் அழிவை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று அறியும் போது இந்த சாபத்திலிருந்து இரட்சிப்பை பெறுவதற்குரிய செய்தியை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலைக்கு வருவான் – அது மட்டுமல்ல தேவன் தம்முடைய அன்பின் காரணமான மாபெரும் இரட்சகராகிய இயேசுவை அளித்திருக்கிறார் என்பதையும் அவருடைய மரணத்தின் மூலமாக பெற்றுக் கொண்ட இரட்சிப்பு காலப் போக்கில் மானிட குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொரு அங்கத்தினரையும் போய் அடையும் என்பதையும் அறிந்து கொள்வான். தேவனிடம் பயபக்தியாயிருப்பதின் விளைவாக அவன் தொடர்ந்து இயற்கையாகவே பெற்றோருக்கும் கீழ்ப்படிவான்.

ஒரு சிலருக்கு கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு குழந்தைகளாக பிறப்பதற்குரிய நல்ல வாய்ப்பு கிடைத்து விடுகிறது. அத்துடன் கிறிஸ்தவ செல்வாக்கின் கீழும் சிறுவயதிலிருந்தே வளர்க்கப்படுகிறார்கள். தேவனுடைய பராமரிப்பில் சிறுவயதிலேயே தேவனுக்கு பிரதிஷ்டை செய்வதினால் சிலாக்கியங்களையும் அதோடுகூட ஆசீர்வாதங்களையும் காண வழிநடத்தும். நாம் நம் வாழ்க்கையை பின்நோக்கிப் பார்ப்போமாகில் மேலும் அதிக தெளிவோடு நாம் கடந்து வந்த பாதைகள்

நமக்கு தெரிய வரும். அநேக படுகுழிகளிலிருந்தும், கண்ணியிலிருந்தும், துயர அனுபவங்களிலிருந்தும் நாம் காக்கப்பட்டு அவருடைய மிகப் பெரிய ஆசீர்வாதங்கள் நம்மை வந்து தாங்கும் படி செய்திருப்பதை நாம் அறிவோம். இதுவரை கூறியிருப்பதை நம் பாடத்திற்கு ஓர் முன்னோட்டமாக கருதுவோம். அதே சமயத்தில் தேவனுடைய மிகப் பெரிய கிருபையால் பாவத்தை விட்டு ஓடி நமது இரட்சகருக்கு அருகில் வந்து அவரின் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்போருக்கு நாங்கள் எங்களின் ஒத்துணர்வுகளை பகிர்ந்து கொள்ள ஆசிக்கிறோம். பொல்லாங்கான நாட்கள் விரைந்து வருவதற்கு முன்னதாகவே தங்களின் இளமை பருவத்தில் கர்த்தரைக் தேடுவோரைக் குறித்து நமது பரம பிதா குறிப்பாக அதிக அக்கறைக் காட்டுகிறார். இந்த பத்திரிகையை படிக்கும் இளம் வயதுடைய வாசகர்கள் மேல் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ளோம்.

குறிப்பாக, தேவனுடைய அன்பு அவர்களின் உள்ளங்களில் கிரியை செய்வதை உணர்ந்து, அவரை அண்டி நெருங்கி வருவதற்கு முற்பட்டு தங்களை முழு பிரதிஷ்டை செய்து தங்களின் இரட்சிப்பின் அதிபதியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தங்கள் சுய சித்தத்தை வெறுத்து தங்களையே பலியிட்டு படிப்படியாக அவர்கள் தேவ ராஜ்யத்திற்கு முன்னேறி வருகிற அவர்கள் மேல் விசேஷமாக ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம். மிக ஆவலோடு தங்கள் பயணத்தை தொடர்ந்து நடந்து வருவோருக்கு நாங்கள் எங்கள் மனமார்ந்த வாழ்த்து களையும் கர்த்தருக்குள் எங்கள் மரியாதையையும் தெரிவிக்கிறோம். அவர்கள் கடந்து வந்த பாதையைக் கருதி அவர்களுக்கு எங்கள் மகிழ்ச்சியை தெரிவிக்கிறோம். அத்துடன் மேலும் வருங்காலங்களில் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் வாழ்த்துகிறோம்.

***




# தேவ புத்திரர், மனுஷ குமாரத்திகள்

SONS OF GOD, DAUGHTERS OF MEN

ஆதி மனித சிருஷ்டிப்புக்கு வெகு காலத்திற்கு முன்பாகவே தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர். ஆயினும் ஆதாமின் நாள்வரை பாவம் என்பது அறியப்படவில்லை. வேதாகமத்தைப் பொறுத்தவரை பாவத்தின் தொடக்கம் ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்தது. லூசிஃபர் என்ற பெயர் கொண்ட மிகவும் உயர்ந்த நிலையிலிருந்த ஒரு தூதன் வெகு காலமாக தன் இருதயத்தில் பேராசையான திட்டங்களை வைத்திருந்தான். எப்பொழுதாவது அவனுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் அவன் தேவனுக்கும் தேவ தூதர்களுக்கும் அவைகளை காட்டலாம் என்றிருந்தான். அவனுடைய எண்ணம் தீர்க்கதரிசியால் இவ்விதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது யாதெனில் : "நான் நட்சத்திரங்களுக்கு (தேவ தூதர்களுக்கு) மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன்." அதாவது ஒரு சக்கரவர்த்தியைப் போல, முதல் மனித ஜோடியை லூசிபர் கவனித்துக் கொண்டிருந்த போது தனது சோதனை முயற்சியை செய்து பார்க்க ஆசைப்பட்டான். அந்த முதல் மனித ஜோடி தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய ஒழுங்குகள் கொண்ட ஜீவிகள், அவர்கள், தேவ தூதர்கள் பெற்றிராத சந்ததியை விருத்தி செய்யக்கூடிய வல்லமையை பெற்றிருந்தார்கள். பூமியை நிரப்பப் போகும் அவர்களுடைய சந்ததியே அவனுடைய இலக்காயிற்று. அவர்கள் மூலமாக அவன் தன் பேராசையான திட்டங்களை செய்தான். இவ்வாறாக லூசிஃபர் சாத்தானாக மாறினான். அதாவது தேவனுக்கு எதிராளியானான். ஏசா. 14 : 12-14.

பரிசுத்த தேவதூதர் எல்லாரும் பிரமித்தனர். அவனுடையது தான், தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராக செய்யப்பட்ட முதல் கலகமாகும். எவ்வித தண்டனையும் தொடரவில்லை. தேவன் தம்முடைய பிரமாணங்கள நிறைவேற்ற வல்லவரா இல்லையா என்று தேவ தூதர்கள் சந்தேகங் கொண்டனர். நூற்றாண்டுகள் கடந்தோடின. மனித குடும்பம் அழிந்து கொண்டிருந்தது. "செத்துக் கொண்டே சாவாய்" என்ற தேவனுடைய தண்டனை படிப்படியாக நிறைவேறிக் கொண்டிருந்தது. மரித்துக் கொண்டே இருக்கும் குடிமக்களால் தன்னுடைய ராஜ்யம் இழிவாக காட்டப்படும் என்பதை சாத்தான் உணர்ந்தான். அவன் தேவனை ஏமாற்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தினான். மிக உயர்ந்த ஜீவ சக்தியோடு உள்ள

கலப்பின மனிதர்களை அதாவது ஒரு புதிய ஒழுங்கிலான ஜீவிகளை விருத்தி செய்தான்.

தேவதூதர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட வல்லமையாகிய மானிட உருவத்தை எடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தார்கள். அவர்களால் மனிதர்கள்போலக் காணப்படும் மானிட சரீரங்களில் வெளிப்பட முடியும். ஆதியாகமம் 18 ஆம் அதிகாரத்தில் வேதாகமம் இதனை உறுதி படுத்துகிறது. மனுக்குலத்தை தேவனிடம் திரும்பக் கொண்டு வரக் கூடுமோ இல்லையோ என்பதை நிரூபிக்க தேவதூதர்கள் விழுந்து போன மனுக்குலத்தோடு தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டனர். (எபி. 2 : 5)

"தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ள வர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்" என்று ஆதியாகமம் 6 : 2-5 குறிப்பிடுகிறது. இவ்வாறாக தூதர்கள் ஒரு புதிய சந்ததிக்கு தகப்பன்மார்களாக ஆனார்கள். அந்த புதிய சந்ததி ஆதாமின் சந்ததியிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். அவர்களெல்லாரும் சடத்துவ மற்றும் மானத அளவில் ரட்சதர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "பலவான்களான" இவர்களால் பூமியானது அராஜகத்தால் நிரம்பிற்று.

## பாடம் -15 -திற்கான கேள்விகள்

1. மனுஷர் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன் தேவ தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டனரா? பாரா-1
2. பாவம் எங்கே துவங்கிற்று?
3. லூசிஃபர் யார்? அவனுடைய திட்டங்கள் என்ன?
4. முதல் மனித ஜோடியை கவனித்துக் கொண்டிருந்த போது லூசிஃபரைத் தூண்டியது எது?
5. ஆதாமும் ஏவாளும் தேவ தூதர்களைவிட எவ்விதத்தில் வேறுபட்டு இருந்தனர்?
6. எவ்வாறு லூசிஃபர் சாத்தானாக மாறினான்?
7. லூசிஃபரின் பாவம் பரிசுத்த தூதர்களின் மீது என்ன விளைவை ஏற்படுத்தியது? பாரா-2
8. மனுக்குலத்தின் மீதான தேவ தண்டனையைப் பார்த்த போது சாத்தான் என்ன புரிந்து கொண்டான்?
9. தேவ தூதர்களால் மனுஷ உருவமெடுக்க முடியுமா? பாரா-3
10. மனுக்குலத்தோடு தொடர்பு கொள்ள தேவ தூதர்கள் ஏன் அனுமதிக்கப்பட்டனர்?
11. புதுவிதமான சந்ததிக்கு துன்மார்க்கமான தேவ தூதர்கள் எவ்வாறு தகப்பன்மார்களாக ஆனார்கள்? பாரா-4.
12. அந்த புதுவித சந்ததி மனுக்குலத்தைவிட எவ்விதம் வேறுபட்டு இருந்தது?
13. அவர்கள் பூமியை எதினால் நிரப்பினார்கள்?




தேவ குமாரர்கள் மனுஷ குமாரத்திகள்


*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**

32 D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**